பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 15 சனிக்கிழமை (29-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:216

## வேலணையில் புலிகள் தாக்கப்பட்ட சம்பவம்:

# ஈ.பி.டி.பி. சமுகமளிக்காத நிலையில் நேற்று விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்29

விடுதலைப் புலிகளின் தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், உறுப்பினர் தயாளன் ஆகியோர் வேலணையில் வைத்து கடந்த 20 ஆம் திகதி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த பாதுகாப்பு அமைச்சு நியமித்த உயர் மட்டக் குழு தீவகத்துக்கு நேற்று வருகைதந்தது.

இந்தக் குழுவின் விசாரணைகள் வேலணை, சாட்டி புனித சித்தாத்திரை மாதா ஆலயத்தில் நேற்று முற்பகல் 10 மணிமுதல் இடம்பெற்றது.

இந்த விசாரணைக்கு கடற்படையினர், விடுதலைப் புலிகள், ஈ.பி.டி.பி. ஆகிய தரப்புகளின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

கடற்படையின் சார்பில் ஊர்காவற்றுறை கட்டளை அதிகாரி நிஹால் சந்திரசிறி சமுகமளித்திருந்தார்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாடு மேய்க்கச் சென்றவேளை

# எழுதுமட்டுவாள் வயற்பகுதியில் இளைஞன் சூட்டுக்குப் பலி!

வடமராட்சி,ஜூன்29

எழுதுமட்டுவாள் வடக்கு வயல் வெளிப் பகுதிக்கு மாடு மேய்க்கச் சென்ற இளைஞர் ஒருவர் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்திருக்கிறார். இவரது சடலம் நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டது.

எழுதுமட்டுவாள் வடக்கைச் சேர்ந்த இராசக்கோன் சிவச்செல்வம் (வயது19) என்னும் இளைஞரே உயிரிழந்தவராவார்.

வியாழக்கிழமை நண்பகல் மாடு மேய்க்கச் சென்ற பிரஸ்தாப இளைஞர், அன்றுமாலை வீடு திரும்பாததால் அவரது பேரனார் நேற்று அவரைத் தேடிச் சென்றிருக்கிறார். அப்போது வயற்பிரதேசத்தில் படையினர் பயிற்சியில் ஈடுபடும் இடத்துக்குச் சமீபமாக அந்த இளைஞர் சூட்டுக்காயத்துடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் - முஸ்லிம் இனக்கலவரம் மூளும் ஆபத்து

# மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் ஊரடங்கு!

## வன்செயல்கள் பரவுவதைத் தடுக்க

கொழும்பு,ஜூன்29

**கிழக்கில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் வசிக்கும் பகுதிகளில் வன்செயல்கள் கட்டுக்கடங்காது தலையெடுத்துப் பரவிவருவதை அடுத்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் முழுவதிலும் காலவரையற்ற ஊரடங்குச் சட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தியிருக்கிறது.**

ஊரடங்கு உத்தரவு தொடர்பான விசேட அறிவித்தல்கள் நேற்றிரவு அரச வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் விடுக்கப்பட்டது.

வன்செயல்களைக் கட்டுப்படுத்த முதலில் ஆங்காங்கே உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு உத்தரவைப் பொலீஸார் நடைமுறைப்படுத்தினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் அமைதியை நிலைநாட்ட 20பேர் கொண்ட சமாதானக் குழு

வாழைச்சேனை,ஜூன்29

மட்டக்களப்பில் பூரண அமைதியை நிலைநாட்டுவதற்கு தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த 20 பேர் கொண்ட சமாதானக் குழு ஒன்றை உருவாக்க மேல்மட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

நேற்று வாழைச்சேனைக்கு விஜயம் செய்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதேச செயலகத்தில் பிற்பகல் நடத்திய ஒரு மாநாட்டிலேயே சமாதானக்குழு அமைக்கப்பட்டது.

கலவரங்களால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வாழைச்சேனை நகரையும் ஏனைய பகுதிகளையும் அமைச்சர்கள் குழுவினர் நேற்று முற்பகல் சுற்றிப் பார்வையிட்டனர். நேற்றுமுன்தினம் பிற்பகல் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டமாவடியில்

# பிரதி அமைச்சரின் இல்லம் தாக்கி எரிக்கப்பட்டது!

மட்டக்களப்பு,ஜூன்29

மட்டக்களப்பு ஓட்டமாவடியில் மீன்பிடி பிரதி அமைச்சர் மொஹுதீன் அப்துல்காதரின் இல்லம் நேற்று தாக்கி அழிக்கப்பட்டது.

கலவரங்களால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட அங்குசென்ற அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் குழு அங்கிருந்து திரும்பிய சிறிது நேரத்தில் இச்சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

அமைச்சர்கள் குழு சென்ற பின்னர் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் நகரில் ஒன்றுதிரண்டனர். பின்னர் அவர்கள் ஓட்டமாவடியில் உள்ள கடற்றொழில் பிரதிஅமைச்சர் அப்துல் காதரின் இல்லத்தைத் தாக்கத் தொடங்கினர். தாக்குதலை அடுத்து இல்லத்தின் முன்பகுதி எரியத் தொடங்கியது.

பொலீஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டபோதும் அவர்களால் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இராணுவ வாகனம் ஒன்று அங்கு கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருந்தது.

இச்சம்பவம் நடந்தபொழுது குறிப்பிட்ட வீட்டில் எவரும் இருக்கவில்லை. காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த ஓரிருவரும் அங்கு காணப்படவில்லை.

அமைச்சர்கள் தங்களைச் சந்திக்காமல் சென்றதால் மக்கள் ஆத்திரமடைந்தனர் என்று கூறப்பட்டது.

இதற்கிடையே செம்மண்ஓடை என்ற இடத்தில் நடைபெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் 6 பேர் காயமடைந்தனர். அவர்களில் இருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ஐ)

## மூச்சந்தீ மூர்ஸீ



...அப்ப கிழக்கு கொந்தளிக்குது எண்டு சொல்லுங்கோ...

## கடற்போக்குவரத்து தொடர்பாக இணக்கம்

கிளிநொச்சி,ஜூன்29

விடுதலைப் புலிகளின் சுதந்திரமான கடற்போக்குவரத்துத் தொடர்பாக இணக்கம் காணப்பட்டுள்ளது என்று விடுதலைப் புலிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

கிளிநொச்சிக்கு நேற்றுமாலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஹக்கீமுடன் தமிழ்ச்செல்வன் தொலைபேசியில் தொடர்பு!

கிளிநொச்சி,ஜூன்29

கிழக்கில் இடம்பெற்றுவரும் கலவரங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கும்படி விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமிடம் கோரியிருக்கிறார்.

தமிழ்ச்செல்வன் தொலைபேசி மூலம் அமைச்சர் ஹக்கீமுடன் தொடர்புகொண்டு இந்தக் கோரிக்கையை விடுத்தார் என்று புலிகளின் வானொலி தெரிவித்திருக்கிறது.

கிழக்கில் இடம்பெறும் வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் -

வீணான உயிர் இழப்புக்களைத் தடுக்குமாறும் - தமிழ்ச்செல்வன் கேட்டுள்ளார்.

(ஐ-12)

# கைதிகளை வெளியிடங்களுக்கு விமானத்தில் அனுப்ப முயற்சி!

## தரைவழிப் பயணம் சாத்தியமில்லை

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படும் கைதிகளை விசாரணைகளின் நிமித்தம் வெளிமாவட்டங்களுக்குக் கொண்டுசெல்வதற்கு விமான மார்க்கத்தைப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

கைதிகளை விமானம் மூலம் பாதுகாப்பாக அழைத்துச் செல்வது தொடர்பாக ஐசிஆர்சியின் சர்வதேசக் குழுவின் உதவி நாடப்பட்டிருப்பதாக யாழ். சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை வழக்கு விசாரணைக்காக வெளிமாவட்ட நீதிமன்றங்களில் முற்படுத்தவேண்டி உள்ளது. எனினும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா முகாம்களில் தங்கியிருந்த

# 10 குடும்பங்கள் நேற்று தரை வழியாக வந்தன

யாழ்ப்பாணம்,ஜூன்29

வவுனியா அகதிமுகாம்களில் தங்கியிருந்த குடாநாட்டைச் சேர்ந்த 10 குடும்பங்கள் தரைவழியாக நேற்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தன.

வவுனியா அரச அதிபர் கே.கணேஷின் ஏற்பாட்டில் அதிகாரி ஒருவரின் மேற்பார்வையில் 3 பஸ்களில் அனுப்பப்பட்ட இவர்களை யாழ்.பதில் அரச அதிபர் து.வைத்திலிங்கம் பொறுப்பேற்றார்.

அவர்களில் கட்டுவனைச் சேர்ந்த இரு குடும்பங்கள் தவிர்ந்த ஏனையோர் அவர்களின் சொந்த இடங்களுக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்பட்டனர்.

கட்டுவனைச் சேர்ந்தவர்கள் யாழ். மணியம் கட்டடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இன்று அவர்கள் வலி. வடக்கு பிரதேச செயலரிடம் கையளிக்கப்படவிருக்கின்றனர்.

(12. ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் காரியாலயத்தில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் புத்தொளி சிவபாதம், நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் தந்தை செல்வாவின் உருவப்படத்திற்கு முன்பாக அமர்ந்திருக்கின்றனர். அருகில் வரவேற்புக் கூட்டத்தில் கலந்துகொண்டோர்.

# யாழ்.கூட்டணி அலுவலகத்தில் ஆனந்தசங்கரிக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம்,ஜூன்29

அமரர் சிவசிதம்பரத்தின் மறைவுக்குப் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரியை வரவேற்கும் வரவேற்புக் கூட்டம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர்கள் பலர் தலைவர் வீ.ஆனந்தசங்கரியை வரவேற்று சிறப்புரையாற்றினார்கள்.

நூற்றுக்கு மேற்பட்ட கூட்டணி ஆதரவாளர்கள் இவ்வரவேற்புக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இறுதியில் வரவேற்புக்கு நன்றி தெரிவித்து தலைவர் வீ.ஆனந்தசங்கரியும் உரை நிகழ்த்தினார். (ஐ-8)

## யாழ்.நவீனசந்தை மாடிக்கட்டட தளம் இடிந்து வீழ்ந்தது!

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்.நவீனசந்தை உட்புறமாக ஓரிடத்தில், மாடிக்கட்டடத்தின் தளப் பகுதி இடிந்து வீழ்ந்ததில் கீழே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள ஒன்று முற்றாகச் சேதமடைந்தது.

நேற்று மாலை - ஆள்கள் நடமாட்டம் குறைந்திருந்த நேரத்தில் - இச்சம்பவம் இடம்பெற்றதால் பெரியளவில் அனர்த்தங்கள் எதுவும் இடம்பெறவில்லை. அருகில் நின்ற பெண் ஒருவர் சிறு காயங்களுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. கட்டடத்தின் மேற்தளப் பகுதி பாரிய சத்தத்துடன் கீழே இறங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# நீதிமன்றத்தில் முறைகேடாக நடந்த அனுருத்தவின் புதல்வருக்கு எச்சரிக்கை!

## மடவளை வழக்கு விசாரணை ஜூலை 12 இற்கு ஒத்திவைப்பு

கண்டி,ஜூன்29

மடவளை முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை சம்பவ சந்தேகநபர்களில் ஒருவரான அனுருத்த ரத்வத்தவின் மூன்றாவது புதல்வரான மஹேறன் ரத்வத்தை தெல்தெனிய நீதிவான் இனோகா ரணசிங்கவினால் நேற்று கடுமையாக எச்சரிக்கப்பட்டார்.

படுகொலை சம்பவ விசாரணை முடிவுற்ற பின்னரே இது நடந்தது.

விசாரணை முடிவுற்று நீதிமன்றத்தில் இருந்து சம்பந்தப்பட்டோர் வெளியே சென்றுகொண்டிருக்கும்பொழுது சி.ஐ.டி. அதிகாரி லிண்டன் ரத்னாயக்காவை நோக்கி 'இதுதானா உங்கள் வேலை?' என்று மஹேறன் கூறியிருக்கிறார். நீதிமன்றத்தில் முறைகேடாக நடந்த இச்சம்பவத்தை நீதிவான் செல்வி இனோகா ரணசிங்க அவதானித்துக்கொண்டிருந்தார்.

உடனே மஹேறன் ரத்வத்தையை நோக்கிய நீதிவான், நீதிமன்றத்தில் இப்படி நடக்க முற்பட்டால் இதன்பின்னா எச்சரிக்கை செய்யப்படமாட்டீர் என்று கூறி அவரைக் கடுமையாக எச்சரித்தார். இந்நிலையில் மஹேறன் ரத்வத்தை நீதிவானிடம் மன்னிப்புக் கோரினார்.

நேற்றைய விசாரணையின்போது ஜெனரல் ரத்வத்தை உட்பட 11 பேர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். பொலீஸ் சுப்பிரிண்டன் குலசிரி உடுகம்பல 23 ஆம், 24 ஆம் சந்தேகநபர்களிடம் இருந்து பலவந்தமாக வாக்குமூலங்களைப் பெற்றார் என்ற சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணியின் பார்வைக்கு ஒப்படைக்கப்பட்டது. இந்த வாக்குமூலங்கள் சோடிக்கப்பட்டவை என அவர் நீதிவானிடம் எடுத்துவிளக்கினார்.

இந்நிலையில் நீதிவான் 23 ஆம், 24 ஆம் சந்தேகநபர்களிடம் கேள்வி தொடுத்தார். தாம் கொடுத்த வாக்குமூலங்களை நன்கு வாசித்து பின்னர் அவற்றில் கையொப்பமிட்டோம் என இருவரும் நீதிவானிடம் தெரிவித்தனர். வழக்கு விசாரணையை ஜூலை மாதம் 12 ஆம் திகதிவரை ஒத்தி வைத்த நீதிவான், 10 சந்தேகநபர்களையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ)

### தமிழீழ வைப்பகத்தின் கிளைகளில்

# அடகு நகைகள் மீளளிப்பு ஜூலை 15 வரை மட்டுமே

யாழ்ப்பாணம்,ஜூன்29

தமிழீழ வைப்பகத்தின் யாழ்ப்பாணம், நெல்லியடிக் கிளைகளில் 1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் நகை அடகு வைத்தவர்களுக்கு அவற்றை மீளளிக்கும் பணி யாழ்ப்பாணத்தில் அடுத்தமாதம் 15 ஆம் திகதிவரை மட்டுமே இடம்பெறும்.

வைப்பகத்தின் யாழ்.கிளை முகாமையாளர் க.பாலகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை யாழ்.அலுவலகத்தில் நகை மீளளிக்கும் பணி தற்சமயம் இடம்பெற்று வருகின்றது என்றும் -

எதிர்வரும் 15 ஆம் திகதிக்குப் பின்னர் நகை மீளளிப்பு மல்லாவியில் உள்ள வைப்பகத்தின் யாழ். கிளையில் இடம்பெறும் என்றும் -

அவர் தெரிவித்தார்.

நகை அடகு வைத்த, பற்றுச் சீட்டுத் தொலைத்தவர்கள் சத்தியக் கடதாசி ஒன்றைச் சமர்ப்பித்து நகையினை மீளப்பெறலாம் என்றும் -

வெளிநாட்டில் உள்ளவர்கள் பிரதிநிதி ஒருவர் மூலம் தமது நகையை மீளப்பெற வசதி செய்யப்பட்டிருப்பதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார்.(ஐ-3)

# நல்லூர் நாவலர் மண்டபத்தை அமைச்சு பொறுப்பேற்றது

யாழ்ப்பாணம்,ஜூன்29

நல்லூர் கந்தசுவாமி கோயில் அருகே அமைந்துள்ள நாவலர் மண்டபத்தை இந்து கலாசார அமைச்சு பொறுப்பேற்றுள்ளது.

நாவலர் மண்டபத்தைப் புனரமைத்து நவீன வசதிகள் கொண்ட அரங்காக மாற்ற அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த மண்டபத்தைச் சுற்றியுள்ள பற்றைகள் வெட்டப்பட்டு அருகில் புதிய மண்டபம் ஒன்றையும் அமைச்சு நிறுவவுள்ளது.

அங்கு தினமும் அன்னதானம் வழங்கவும், பக்தர்கள் அமர்ந்து இளைப்பாறிச் செல்லவும் ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன என்று இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

நாவலர் மண்டபம் இதுவரை காலமும் நாவலர்சபையின் பொறுப்பில் இருந்துவந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

# மக்கள் போக்குவரத்துக்கு சரசாலை வீதி திறப்பு

தென்மராட்சி,ஜூன்29

கடந்த இரண்டு வருடங்களாக பொதுமக்களின் பாவனைக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த கனகன் புளியடிச்சந்தி - சரசாலை வீதி நேற்று முன்தினம் தொடக்கம் திறந்துவிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இவ்வீதியூடாக பயணிகள் வாகனங்களில் மட்டும் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

சைக்கிள், மோட்டார் சைக்கிள் உட்பட ஏனைய வாகனங்கள் வேறு பாதைகள் ஊடாகவே செல்ல அனுமதிக்கப்பட்டன.

இப்பகுதியில் உள்ள இலந்தைத் திடல் வீரமாகாளி அம்பாள் ஆலய கும்பாபிஷேகத்தை ஒட்டி தற்போது இந்த வீதி திறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## திங்கள் முதல் தனியார் பஸ் கட்டணங்கள் உயர்வு

கொழும்பு,ஜூன்29

தென்னிலங்கையில் தனியார் பஸ் கட்டணங்கள் உயர்வு ஜூலை முதலாந்திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது. போக்குவரத்துச் சபை பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது.

ஐந்து ரூபா முதல் ஏழு ரூபா வரையிலான கட்டணங்கள் ஒரு ரூபாவால் அதிகரிக்கும். 7 ரூபா 50 சதம் கட்டணம் 9ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.9, 10 ரூபா கட்டணங்கள் இரண்டு ரூபாவால் அதிகரிக்கப்படுகின்றன. 12ரூபா கட்டணம் 15ரூபாவாக அதிகரிக்கும்.

- இவ்வாறே ஏனைய குறுகிய தூர கட்டணங்கள் அதிகரிக்கப்படுகின்றன. (ஐ)






இன்று நடக்கும் ஆட்டத்திற்காக தென்கொரிய வீரர்களைத் தயார்ப்படுத்தும் பயிற்சியாளர் கிடின்ட் (மத்தி).

# தென்கொரியா - துருக்கி 3ஆம் இடத்திற்கு மோதல்

சியோல்,ஜூன்29

கடந்த ஒரு மாதகாலமாக பெரும் கோலாகலமாக நடைபெற்றுவந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் முடிவுறும் தருணத்தை அடைந்துவிட்டன. நாளை நடைபெறும் இறுதி ஆட்டத்துடன் இந்த போட்டித் தொடர் முடிவடைந்துவிடும். எனினும் இன்னும் நான்கு ஆண்டுகளுக்கு அதன் பதிவுகள் பசுமையாக இருக்கும்.

இந்தப் போட்டித் தொடரின் மூன்றாவது இடத்துக்கான ஆட்டம் இன்று நடைபெறுகின்றது. தென்கொரியாவை எதிர்த்து துருக்கி மோதுகின்றது. கொரியாவின் டேஹு மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெறும்.

இதில் கலந்துகொள்ளும் இரு அணிகளுமே சமபலம் கொண்டவை என்று கணிக்கப்படுகின்றன. இந்தப் போட்டியில் வென்று மூன்றாவது இடத்தைத் தென்கொரியா கைப்பற்றினால் அது வரலாற்றுச் சாதனையாக இருக்கும். தனது சொந்த மண்ணிலேயே ஆடுவது அந்த அணிக்கு கூடுதல் பலம். எனினும் துருக்கிய அணியும் குறைத்து மதிப்பிடமுடியாததே. இரு அணிகளிலும் பல சிறந்த வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். எப்படியாவது மூன்றாவது இடத்தை வென்றுவிடவேண்டும் என்பதில் இரு அணிகளுமே தீவிரமாக உள்ளன.

ஆசியாவில் முதற்றடவையாக இடம்பெற்ற இந்த 17ஆவது உலகக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் ஆசியாவுக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் தென்கொரிய அணியை அரையிறுதிவரை முன்னேற வைத்ததில் தென்கொரிய பயிற்சியாளரான போர்த்துக்கலைச் சேர்ந்த கிடின்ட் பாராட்டப்பட வேண்டிய ஒருவராக இருக்கிறார். தென்னமெரிக்க மற்றும் ஐரோப்பிய அணிகளைத் திறம்பட எதிர்கொள்ளக்கூடிய வகையில் தென்கொரிய அணியை அவர் திறம்பட வழிநடத்தியிருந்தார்.

தென்னமெரிக்க மற்றும் ஐரோப்பிய அணிகளின் ஆட்டநுணுக்கங்களை இணைத்து அதன் மூலம் தென்கொரியாவுக்கான தனி ஆட்டமுறை ஒன்றை அவர் ஏற்படுத்திக் கொடுத்ததே, அந்த அணி அரையிறுதிவரை முன்னேற வாய்பாக இருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. அவரது பயிற்சியின் திறத்தால் இன்றைய ஆட்டத்தில் துருக்கியை வென்று தென்கொரியா மூன்றாம் இடத்தை வெல்லுமா என்பதே இன்றுள்ள கேள்வி. வென்றால் ஆசியாவுக்குப் மேலும் பெருமை சேர்கும் தென்கொரியா. தோற்றால் அரையிறுதிவரை முன்னேறிய முதலாவது ஆசிய அணியென்ற பெருமையை அது தக்கவைத்துக் கொள்ளும். (ம)

# மரடோனாவிற்கு ஜப்பான் அனுமதி

டோக்கியோ,ஜூன்29

தற்போது நடைபெற்றுவரும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தைப் பார்ப்பதற்கு ஆர்ஜென்ரீனாவின் உதைபந்தாட்ட முன்னாள் வீரர் டியாகோ மரடோனாவுக்கு ஜப்பானிய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மரடோனா போதைவஸ்து பயன்படுத்தினார் என்பதற்காக உலக உதைபந்தாட்ட சம்மேளனமான FIFAயால் தண்டனைக்குள்ளாக்கப்பட்டவர். ஜப்பானிய சட்டப்படி போதைவஸ்து பயன்படுத்தியதற்காகத் தண்டனை பெற்றவர்களை நாட்டுக்குள் நுழைய அனுமதிக்க முடியாது. இதனால் மரடோனா ஜப்பானுக்கு வருவதற்கு அந்நாட்டு அரசு முதலில் அனுமதி மறுத்திருந்தது.

இதனால் இதுவரை ஜப்பானில் நடைபெற்ற ஆட்டங்களை தென்கொரியாவில் இருந்தபடி தொலைக்காட்சியிலேயே பார்த்து ரசிக்க வேண்டிய இக்கட்டு நிலைககு மரடோனா தள்ளப்பட்டார்.

ஆனால் நாளை ஜப்பானில் நடைபெறவுள்ள இறுதி ஆட்டத்தை நேரில் பார்ப்பதற்கு மரடோனாவுக்கு ஜப்பானிய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவரது உதைபந்தாட்டத் திறமையைக் கௌரவிக்கும் முகமாக சட்டத்திற்கு அப்பாற்பட்டு அவருக்கு விசேட அனுமதியை அரசு வழங்கியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அனுமதி வழங்கப்பட்டதையடுத்து மரடோனா நேற்று ஜப்பானுக்கு வந்து சேர்ந்தார். இறுதி ஆட்டத்தை நேரில் பார்ப்பதற்கு தனக்கு அனுமதி அளித்தமைக்காக ஜப்பானிய அரசுக்கு அவர் நன்றி தெரிவித்தார். (ம-12)



ஜப்பானில் வந்திறங்கிய மரடோனா

# சோவியத் ஒன்றியம் தயாரித்த ஆயுதங்களை அழிப்பதற்கு 90 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கீடு

லண்டன்,ஜூன்29

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளில் தயாரிக்கப்பட்ட பேரழிவை ஏற்படுத்தும் பயங்கர ஆயுதங்களைத் தீவிரவாதிகளின் கைகளில் சிக்காமல் அழிப்பதற்காக உலகின் பலம வாய்ந்த அமைப்பாக கருதப்படும்- பணக்கார நாடுகள் அங்கம் வகிக்கும் - ஜி-8 அமைப்பு இந்திய மதிப்பில் 90 ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

கனடாவில் உள்ள கனானாஸ்கிஸ என்ற மலை வாசஸ்தலத்தில் இரண்டு நாள்களாக இடம்பெற்ற ஜி-8 நாடுகளின் மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளினால் தயாரிக்கப்பட்ட இந்த ஆயுதங்களை எதிர்வரும் 10 ஆண்டுகளிற்குள் அழித்து விடுவதெனவும் அங்கு முடிவுசெய்யப்பட்டது.

முதலாளித்துவ நாடான அமெரிக்காவுக்கும், சோவியத் ரஷ்யாவுக்கும் இடையே பனிப்போர் நிலவி வந்ததால், ஆபத்துக்கள் ஏற்படலாம் என அஞ்சி சோவியத் ரஷ்யா இரசாயன ஆயுதங்களையும், அணு ஆயுதங்களையும் பெருமளவில் தயாரித்து வந்தது.

சோவியத் ஒன்றியம் உடைந்து போனதும் அதனிடமிருந்த பயங்கர ஆயுதங்கள் பல்வேறு குட்டி நாடுகளிடம் போய்ச் சேர்ந்தன.

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள - வறுமையில் வாடும் - இந் நாடுகள் தம்மிடம் உள்ள பயங்கர ஆயுதங்களைப் பாதுகாக்க முடியாமல் திண்டாடுகின்றன. ஒஸாமா பின் லேடனின் அல்கெய்டா போன்ற பயங்கரவாதக் குழுக்கள் இந்த ஆயுதங்களைக் கைப்பற்ற முயற்சி செய்து வருகின்றன.

இந்நிலையிலேயே இந்த ஆயுதங்கள் பயங்கரவாதக் குழுக்களிடம் சிக்கிவிடுவதைத் தடுக்கும் வகையில் அவற்றை அழித்துவிடுவது என்று ஜி-8 நாடுகள் மாநாட்டில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆயுதங்களை அழிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள 90 ஆயிரம் கோடி ரூபாவில் பாதித் தொகையான 45 ஆயிரம் கோடி ரூபாவை அமெரிக்கா 10 ஆண்டுகளில் வழங்க முன்வந்துள்ளது. ஜேர்மனியும் 6 ஆயிரத்து 800 கோடி ரூபாவை வழங்கும்.

இந்த ஆயுதங்களை அழிக்கும் திட்டம் முழுவதையும் தன்னிடம் விட்டுவிடும்படி ரஷ்யா வலியுறுத்திக் கேட்டுக்கொண்டபோதிலும், ஜி-8 இல் அங்கம் வகிக்கும் ஏனைய 7 நாடுகளும் இதற்குச் சம்மதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-9-10)

## பொதுத் தேர்தலில் பெனாஸிர், நவாஷ் போட்டியிடத் தடை!

இலஸ்லாமாபாத்,ஜூன்29

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்களான பெனாஸீர் பூட்டோ, நவாஷ் ஷெரிப் ஆகியோர் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அங்கு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இத்தடை உத்தரவைப் பிறப்பித்த பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப், "நாட்டின் கஜானாவை கொள்ளையடித்து அதனை வெளிநாட்டில் முடக்கியவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது" எனவும் தெரிவித்தார் என்று பாகிஸ்தானிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ம-9)

உலக அரங்கில்

### பொலீஸ் கெடுபிடி நீக்கப்படாவிட்டால்

## நிர்வாண ஊர்வலம் வருவோம்; நைஜீரியப் பெண்கள் மிரட்டல்!

நைஜீரியாவில் பொலீஸார் தங்கள் கெடுபிடிகளை நிறுத்தாதுவிட்டால் நைஜரியப் பெண்கள் நிர்வாண ஊர்வலம் நடத்துவார்கள் என்று அந் நாட்டின் நாடாளுமன்ற பெண் உறுப்பினர் அபியோலா ஏகுன் பாகு அறிவித்துள்ளார்.

நைஜீரியத் தலைநகர் லாகோஸில கொள்ளைக்காரர்களை ஒழிப்பதற்காக, அவர்களைக் கண்ட இடத்தில் சுட்டுக்கொல்லுமாறு நைஜீரிய தலைமைப் பொலீஸ் அதிகாரி டாபா பாலோகன் உத்தரவிட்டிருந்தார். அதனையடுத்து நைஜீரியப் பொலீஸார் லாகோஸில் நடத்திய தேடுதலில் பல பாடசாலை மாணவர்களையும் சுட்டுக் கொன்றுவிட்டனர்.

இதனால் அங்குள்ள பெண்கள் அமைப்புக்கள் பொலீஸாருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளன. இந்நிலையிலேயே "பொலீஸார் தமது கெடுபிடிகளை நிறுத்தாது விட்டால், பெண்கள் நடுவீதியில் இறங்கி நிர்வாண ஊர்வலம் நடத்துவார்கள்" என்று அபியோலா அறிவித்துள்ளார். (ம-9)

## ஆப்கானின் முன்னாள் ராணி உயிரிழந்தார்!

ரோம்,ஜூன்29

ஆப்கானிஸ்தானின் முன்னாள் மன்னர் ஜாகீக் ஷாவின்(வயது 87) மனைவி ஹொமைரா ஷா(வயது 84) இத்தாலியின் தலைநகர் ரோமில் உயிரிழந்துள்ளார். கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த இவர் சிகிச்சை பயனளிக்காது ஆஸ்பத்திரியில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

1973ஆம் ஆண்டு இடம்பெற்ற புரட்சியின் பின்னதாக மன்னர் ஷா, ராணியுடன் இத்தாலியில் குடியேறியிருந்தார். 29 ஆண்டுகளுக்குப் பின்னதாக இப்போதுதான் மன்னர் ஆப்கானிஸ்தானுக்கு திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (9)

## ஆப்கானில் ஆயுதக்கிடங்கு வெடித்தது!

காபூல்,ஜூன்29

கிழக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள ஸ்பெயின் போல்ட் எனும் இடத்தில் இந்த ஆயுதங்கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்குண்டு பத்துப் பேர் உயிரிழந்தனர்; 14பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வெடிவிபத்து ஏற்பட்டதும் ஏவுகணைகள் பறந்து குடிமனைகள் மீது வீழ்ந்ததாகவும் இதில் பலர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலுக்கு அல்கெய்டாவினரே காரணம் எனச் சந்தேகிக்கப் படுகிறது.

(9-12)

## உளவு பார்த்த முஸ்லிம் நபர் இஸ்ரேலில் கைதானார்!

லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுக்காக உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இஸ்ரேலிய குடியுரிமைபெற்ற இஸ்லாமியர் ஒருவரை இஸ்ரேலியப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

இஸ்ரேலிய இலக்குகள் குறித்த தகவல்களை ஹிஸ்புல்லாவுக்குக் கொடுப்பதற்கு வைத்திருந்த சமயம் இவர் கைது செய்யப்பட்டதாக இஸ்ரேலியப் பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

இந்த நபரது பெயர் நிஸிம் என்றும் -

இவர் ஜெய்ஸி குடியேற்ற இஸ்ரேலியத் தாய் ஒருவருக்கும் ஷியா இன முஸ்லிம் தந்தைக்கும் பிறந்தவர் என்றும் -

10 ஆண்டுகளுக்கு முன்னர் லெபனானில் இருந்துவந்து இங்கு குடியேறினார் என்றும் -

உள்ளூர் வானொலி தெரிவித்தது.



ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் சிலர்

## பலத்த எதிர்ப்பின் மத்தியில்

## நேபாள மன்னர் விலங்குகளை பலி கொடுத்து விசேட பூசை!

கௌகாத்தி,ஜூன்29

முதன்முறையாக இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகைதந்த நேபாள மன்னர் ஞானேந்திரா, நேற்றுமுன்தினம் அஸாம் மாநிலத்தில் உள்ள சக்தி கோயிலுக்குச் சென்று விசேட பூசைகளை நடத்தினார். அங்கு இந்திய மத்திய அமைச்சர் மேனகா காந்தியால் நடத்தப்படுகின்ற விலங்குகள் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த ஆதரவாளர்களின் எதிர்ப்பையும் மீறி ஆடு, மாடுகள் பலியிடப்பட்டன.

நேபாள அரச குடும்பத்தினர் காலங்காலமாக வழிபட்டுவரும் இந்தியாவின் அஷாம் மாநிலத்தில் உள்ள சக்தி கோவிலுக்கு வந்து பலி கொடுப்பதாக நேபாள மன்னர் முன்பு வேண்டியிருந்தாராம். அதன்படி இந்தியாவுக்கு வருகை தந்த மன்னர் ஞானேந்திராவும் ராணி கோமல் ராஜலட்சுமியும் சக்தி கோயிலுக்குச் சென்றனர்.

கோயிலுக்கு வெளியே மன்னரும் ராணியும் பாதணிகளை கழற்றி விட்டு பிரகாரத்தினுள் நுழைந்தனர். அப்போது வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. கோயில் பிரகாரம் கூரையின்றி இருந்ததால் இருவருக்கும் குடை பிடிக்கப்பட்டது. எனினும் பளிங்குத்தரை மிக சூடாக இருந்ததனால் இருவரும் ஓடிச்சென்று மூலஸ்தானத்தினுள் நுழைந்துவிட்டனராம்.

சக்தி கோயில் தலைமைப் பூசாரி சுமார் 45 நிமிடங்கள் பூசைகளை நடத்தினார். பூசையின்போது ஒரு மாடும், இரண்டு ஆடுகளும், வாத்து, புறா என்பனவும் பலியிடத் தயாராக இருந்தன.

அதற்கிடையில் நேபாள மன்னர் ஆடு மற்றும் மாடுகளைப் பலியிடப் போகிறார் என்பதைக் கேள்வியுற்ற இந்திய மத்திய அமைச்சர் மேனகா காந்தியின் ஆதரவாளர்கள் மலையடிவாரத்தில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனையடுத்து 'எனது வேண்டுதல் நிறைவேற வேண்டும். அதே வேளை, நான் விருந்தினராக வருகை தந்துள்ள நாட்டுக்கு தர்மசங்கடம் ஏற்படக்கூடாது' எனக்கூறி நேபாள் மன்னர் அவ்விலங்குகளை கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைத்தார். நேபாள மன்னர் சென்ற பின்பு அவை பலியிடப்பட்டன.

(ம-9)

## நெதர்லாந்தில் முதலாவது சர்வதேச நீதிமன்றம்

லண்டன்,ஜூன்29

போர்க்குற்றச்சாட்டுக்களை விசரிக்கும் உலகின் முதலாவது சர்வதேச நீதிமன்றம் நாளை மறுதினம் திங்கட் கிழமை முதல் நெதர்லாந்தில் செயற்படவுள்ளது.

உலகளாவிய ரீதியில் போர் சம்பந்தமான அத்துமீறல்களை ஆராய்ந்து உலகிற்கு சரியான விளக்கங்களை வழங்குவது இதன் பிரதான செயற்பாடாக அமையும்.

இந்த நீதிமன்றம் அமைக்கப்படுவதை பல நாடுகள் வரவேற்றுள்ள போதிலும் அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இந்த நீதிமன்றம் இயங்கத் தொடங்குவதற்கு முன்னரே அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு அமெரிக்கா முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ம-9-12)



நேபாளப் பிரதமர் ஞானேந்திரா நேற்றுமுன்தினம் அஸாம் மாநிலத்தில் உள்ள சக்தி கோயிலுக்குச் சென்று விசேட பூசை வழிபாடுகளில் ஈடுபட்டுள்ள காட்சி

## அகதிமுகாமில் இருந்து முப்பது பேர் தப்பினர்

### ஆஸ்திரேலியாவில் சம்பவம்

சிட்னி,ஜூன்29

ஆஸ்திரேலியாவின் தெற்குப் பகுதியில் உள்ள பூமரா அகதி முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த 30 அகதிகள் அங்கிருந்து தப்பி வெளியேறி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்த அகதிமுகாமில் இருந்து அதிக எண்ணிக்கையான அகதிகள் தப்பியோடியிருப்பது இதுவே முதற்றடவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அகதிமுகாமில் தஞ்சம் மறுக்கப்பட்ட அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தமக்குத் தஞ்சம் வழங்குமாறு அல்லது தம்மை அந்த வசதிகுறைந்த அகதிமுகாமில் இருந்து வெளியேற அனுமதிக்குமாறு கோரி அங்கு தங்கியிருந்த அகதிகள் அண்மையில் போராட்டம் நடத்தியிருந்தனர்.

இவர்களில் 34பேர் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவில் தடுப்புக்களை உடைத்துக்கொண்டு வெளியேறித் தப்பிவிட்டனர் என்று குடிவரவு, குடியகல்வுத்துறை அமைச்சர் பிலிப் ருட்டொக் தெரிவித்தார். இவர்கள் அங்கிருந்த வாகனம் ஒன்றில் தப்பி நாட்டின் வேறு பகுதிகளுக்குள் சென்றுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர்களில் நால்வர் ஏற்கனவே பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஏனையவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெறுகின்றது.

தப்பியோடியவர்களில் 15பேரே அகதிகள் மீது அனுதாபம் கொண்டவர்களின் உதவியுடன் திட்டமிட்டுத் தப்பியுள்ளனர். ஏனைய 19பேரும் இவர்கள் தப்பியதைப் பார்த்துவிட்டு, கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தப்பிவிட்டனர் என்றார் அமைச்சர் பிலிப்.

இந்த அகதிமுகாமில் 210 அகதிகள் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுக்கு அங்கு போதிய வசதிகள் எவையும் இல்லை என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக இருந்துவருகின்றது. (ம)

# பிரதமரைப் பதவி நீக்க ஜனாதிபதிக்கு அதிகாரம்!

### பாகிஸ்தானில் முக்கிய சட்டத்திருத்தம் வருகிறது!

பாகிஸ்தானில் பிரதமரைப் பதவி விலக்கும் அதிகாரம் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பிற்கு வழங்கப்படவுள்ளது.

இதற்கான அரசியல் சட்டத்திருத்தம் மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்படி பாகிஸ்தானிய பிரதமரையும், அமைச்சரவையையும் கலைக்கும் அதிகாரம் முஷாரப் வசமாகியுள்ளது. அத்துடன் பிரதமர், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்றம் என்பவற்றின் பதவிக்காலம் 5 ஆண்டுகளில் இருந்து 4 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகவே உள்ளது.

பாகிஸ்தானிய ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் இந்தப புதிய சட்டத்திருத்தம் மீதான விவாதம் ஜூலை 31ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்தச் சட்டத் திருத்தத்தின்படி பாகிஸ்தானிய வாக்காளர்களின் வயது 21இலிருந்து 18ஆக குறைக்கப்படுமெனவும் -

மேற்சபை உறுப்பினர்கள் நேரடியாக தேர்தல்மூலம் தெரிவுசெய்யப் படுவார்கள் எனவும் - தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

பாகிஸ்தானில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பட்டதாரிகள் மட்டுமே போட்டியிட முடியும்மென்ற புதிய உத்தரவை பாகிஸ்தானிய அதிபர் முஷாரப் பிறப்பித்துள்ளார். (ம-9)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்மன்றத் ''தமிழோசை'' மலர் வெளியீட்டு நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்:

முதலாம் பரிசிற்குரிய இல. - 1284
இரண்டாம் பரிசிற்குரிய இல. - 195
மூன்றாம் பரிசிற்குரிய இல. - 2144

ஆறுதல் பரிசில்களுக்குரிய இலக்கங்கள்:
708, 3575, 2394, 2003, 2251, 4011, 3631, 2629, 1528, 991.

தமிழ்மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(5340)

## இலங்கை வங்கி யாழ். மேற்தரக் கிளை வாடிக்கையாளருக்கான முக்கிய அறிவித்தல்

01.07.2002 முதல் யாழ். மேற்தரக்கிளையின் வங்கிச் சேவைகள் கணனி மயமாக்கப்படுவதை முன்னிட்டு சில ஆரம்ப வேலைகள் நடைபெற வேண்டியுள்ளதால்,

**இன்று (29.06.2002) சனிக்கிழமை மட்டும்**
**இவ்வங்கி, வாடிக்கையாளர் சேவைகளுக்காக மூடப்பட்டிருக்கும்.**

இதனால் தங்களுக்கு ஏற்படக்கூடிய வசதியீனங்களுக்கு மனம்வருந்துவதோடு, எதிர்வரும் காலங்களில் பூரண கணனி மயப்படுத்தப்பட்ட சேவைகளை உங்களுக்கு அளிப்போமென்று இத்தால் அறியத்தருகின்றோம்.

சிரேஷ்ட முகாமையாளர்,
இலங்கை வங்கி மேற்தரக் கிளை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C/22705)




எம். டி. குணசேன
**மாபெரும் புத்தகக் கண்காட்சி விற்பனை**

**யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில்**
ஜூலை 3 முதல் 6ஆம் திகதிவரை
காலை 10 முதல் மாலை 6 வரை.
மருத்துவம், அறிவியல், கல்வியியல், பொருளியல், தொடர்பு, தொழில்நுட்ப், கணனியியல், இலக்கியம் என்று பலதுறைகளில். பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை உள்ள நூல்கள், பாடசாலை உபகரணங்கள் அனைத்தும் கிடைக்கும்.
10% விலைக்கழிவு!
அனைவரும் வருக!
(5308)


## யா/இணுவில் மத்திய கல்லூரி கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும் - 2002

*தலைவர்* : திரு. துரை எங்கரசு (அதிபர்)
*இடம்* : கல்லூரி சரஸ்வதி கலையரங்கம்
*காலம்* : நாளை (30.06.2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணி
*பிரதம விருந்தினர்:* திரு. கந்தையா தேவராஜா (வணிகத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)
*ஆசியுரை:* மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர்
*சிறப்பு விருந்தினர்கள்:* திரு. த.தேவராஜா (முன்னாள் பிரதி அதிபர், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி)
திரு. அ.குகதாசன் (முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)
*கௌரவ விருந்தினர்கள்:*
திரு. ச.அரியராசா (பழைய மாணவர், லண்டன்)
திரு. அ.சோமசுந்தரம் *(அபிராமி பெஷன் ஹவுஸ் சுன்னாகம்)*
*பரிசில் வழங்கல்:* திருமதி இலக்சுமிதேவி தேவராஜா

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
*- கல்லூரிச் சமூகம்.*
(5302)

## மருதங்கேணியில் 2 ஆயிரம் குடும்பங்கள் மீளக் குடியமர்வு

வடமராட்சி,ஜூன்29

மருதங்கேணிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துவரும் மக்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் இவ்வாறு மீளக்குடியமர்ந்துள்ளன. இதனால் இப்பகுதியில் இயங்கிவரும் பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கையும் திடீரென அதிகரித்துள்ளது.

மீளக்குடியமர்ந்துவரும் மக்களில் பெரும்பாலானோரின் வீடுகள் யுத்தத்தினால் அழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-182)

## எழுத்துத் தேர்வு

கோப்பாய்க் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டியின் எழுத்துத் தேர்வு இன்று காலை 8.30 மணிமுதல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற உள்ளதாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-72)

## தமிழ்விழா

யாழ்ப்பாணம்,ஜூன்29

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரித தமிழ்ச் சங்கத்தின் தமிழ்விழா இன்று காலை 9மணிக்கு தலைவர் ஜெ.சதீஸ்குமார் தலைமையில் கல்லூரியின் கலை அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்னிந்தியத் திருச்சபையின பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசனும், சிறப்பு விருந்தினர்களாக சைவப் புலவர் இ.செல்லத்துரை, கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ ஆகியோரும் கலந்துகொள்வர்.(எ-10)

## பொன்விழாவும் மலர் வெளியீடும்

கோப்பாய்,ஜூன்29

ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாசாலையின் பொன்விழாவும், மலர்வெளியீடும் இன்று பி.ப.2.00 மணிக்கு அதிபர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதமவிருந்தினராகவும் யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன், நிறைவேற்றுப் பொறியியலாளர் க.குகநேசன், கோப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் ஆகியோர் சிறப்பு விருநதினர்களாகவும் கலந்துகொள்வர். (எ-72)

## 'மழலை எழுச்சி' ஒலிநாடா வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஜூன்29

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் செல்வி மலர் சின்னையாவினால் வடிவமைக்கப்பட்ட 'மழலை எழுச்சி' ஒலிநாடா வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

வெளியீட்டுரையை யாழ்.கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.சுப்பிரமணியமும், ஆய்வுரையை இசைவாரிதி பிரம்மஸ்ரீ ந..வீரமணி ஐயரும், மதிப்புரையை யாழ்.பல்கலைக்கழக நடனத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராசாவும் நிகழ்த்துவர். (எ-ரி)


பரம்பரை பரம்பரையாக மக்களின் நன்மதிப்பை பெற்ற ஆயுர்வேத தயாரிப்பு.






மூவ் பாம்

தசைவலி, தசைப்பிடிப்புகளிலிருந்து உடனடித்தீர்வு
மூட்டு வலிகளிலிருந்து உடனடி நிவாரணம்
விளையாட்டின்போது ஏற்படும் அனைத்து வலிகளுக்குமான முழுமையான நிவாரணி
இடுப்பு, முதுகு வலிகளிலிருந்தும் நிவாரணமளிக்கிறது



A PARAS PRODUCT
விநியோகிப்போர்
பார்ம்கோ மார்க்கடிங் சர்விசஸ் (பி) லிமிடெட் 074-814559
Raj Advertising


## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் ஆதனவரி அறிவித்தல் - 2002

2002ஆம் ஆண்டு இரண்டாம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 01.07.2002 பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி இந்த அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்திற்கு மேலதிகமாக கீழ் விவரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**வெற்றுக் காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் - 15%**
**ஏனைய காணிகள் - 20%**

நிலுவை உட்பட 2002ஆம் ஆண்டுக்கான வரியைச் செலுத்த ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் மாநகர சபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252 பிரிவு X 11,252 (1) இன்படி நடுகட்டல் மூலம் அசைவுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர் **''மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்''** என எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

*மாநகர அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
(சி-22735)


**யாழ் நகர வாசிகளே !**

இதோ இப்போது உங்கள் தேவையறிந்து உங்கள் கரங்களுக்கும்,
உயர்தரமான மெழுகு தடவப்பட்ட பாதுகாப்பான




**அலடின் தீப்பெட்டி**

ஏக விநியோகத்தர்:
**ரூபா வெர்சடைல் டிரேடர்ஸ்**
104ஏ, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
(C/22682)


## கண்ணீர் அஞ்சலி

எமது செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திரு.தா.சுவாமிநாதன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தாமோதரம்பிள்ளை செல்லம்மா**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பளை.

பிரதேச செயலரும்,
அனைத்து அலுவலர்களும்.
(5355)

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் **திரு.கே.தர்மராஜா** அவர்களின் அன்புத் தந்தையா

**மாணிக்கம் கந்தசாமி (மணியண்ணா)**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். ஆத்மா சாந்தியடைவதாக.

பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
*பாதுகாப்புத் திணைக்களம்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*
(5343)

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் கந்தசாமி

*(மணியண்ணை)*

தலங்காவற்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் கந்தசாமி நேற்று (28.06.2002) வெள்ளிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - செல்லாச்சி தம்பதியினரின் புத்திரனும் காலஞ்சென்ற செல்லமுத்து அவர்களின் அருமைச் சகோதரனும் காமாட்சியம்மா (யோகம்மா) அவர்களின் அன்புக் கணவரும், தர்மராசா (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக் கழகம்), நகுலேஸ்வரி (கிளி), சுகுணராசா, சற்குணேஸ்வரி (தேவி - சுவிஸ்), பாக்கியராசா, குகராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்றவாகளான சுப்பிரமணியம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மு.பரமலிங்கம் (தேவா), வள்ளிநாயகி (ராணி), செல்வகாந்தன் (செல்வன் - சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நீபன், நர்த்தனன், மகிந்தன், மாதுரி, மயூரி, மதூசன், சாருசன் ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2002) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தர்மராசா (தருமு),
பாக்கியராசா (விஜயன்).
(பிள்ளைகள்)

*நல்லூர் வடக்கு,*
*நல்லூர்.*
(5356)

# உதயன்

## தீவகப் பேரணி உணர்த்தும் உண்மைகள்

யாழ்.குடாநாட்டு மக்கள் நேற்றுமுன்தினம் யாழ்நகரில் ஒன்றுகூடி அங்கிருந்து தீவுப் பகுதியில் உள்ள ஊர்காவற்றுறைக்கு மேற்கொண்ட பேரணி அசம்பாவிதங்கள் எதுவுமின்றி மிக அமைதியாக நடந்து முடிந்தது.

இது பல உண்மைகளை உணர்த்துகிறது.

நடந்தது ஒரு கண்டனப் பேரணி. அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவுப் பகுதிப் பொறுப்பாளர் செம்மணனும் அவருடைய உதவியாளர் தயாளனும் ஈவிரக்கமின்றி தாக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவிக்கும் பேரணி.

தாக்கியவர்கள் கடற்படையினர் மற்றும் ஈ.பி.டி.பியினர் என்று குற்றச்சாட்டு. அதை அவர்கள் மறுத்தாலும் பொதுமக்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை.

கடற்படையினரையும் அவர்களின் சகாக்களான ஈ.பி.டி.பியினரையும் எதிர்த்து ஆயிரக்கணக்கான யாழ்.குடாநாட்டு மக்கள் கடற்படையினர் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த முகாம்களைத் தாண்டியே பேரணியாக ஊர்காவற்றுறை செல்லக் கிளம்பினார்கள். அது அவர்களின் துணிவைக் காட்டுகிறது.

பேரணி சென்றபோது பண்ணைப் பாலம், அல்லைப்பிட்டிச் சோதனைச்சாவடி முதலானவற்றில் வழமைக்கு மாறாகக் கடற்படையினர் எவரும் இருக்கவில்லை.

அவர்கள் பயந்து ஒதுங்கிக் கொண்டார்கள் என்பது அல்ல; பிரச்சினை ஏற்படக்கூடாது என்று அங்கே நிற்பதைப் புத்திசாலித்தனமாகத் தவிர்த்துக்கொண்டிருக்கலாம் அல்லவா?

சமாதான முன்னெடுப்புகளில் மூழ்கிப் போயுள்ள புலிகள் மீது தாக்குதல் நடத்தினாலும் அவர்கள் வெகுண்டெழுந்து திருப்பித் தாக்க முன்வருகிறார்கள் இல்லை என்பது தெரிந்துவிட்டது.

அதனால் இனி எந்தவித சீண்டுதலும் இல்லாமல் சும்மா இருப்போம், நடப்பது நடக்கட்டும் என்று கடற்படையினர் தத்துவ நிலைக்குத் திரும்பிவிட்டார்கள் என்றும் கொள்ளலாம்.

பேரணி சென்ற பொதுமக்களும் சட்ட வரம்புக்குள் நின்று தமது ஜனநாயக உரிமையை நிலைநாட்டினார்களே தவிர கடற்படையினரையோ வேறு எவரையோ சண்டைக்கு இழுக்கவும் இல்லை; வன்செயல்களில் ஈடுபட நினைக்கவும் இல்லை.

ஆரோக்கியமான கண்டனப் பேரணி அருமையாக நடந்து முடிந்திருக்கிறது.

இப்படி ஒரு முன்மாதிரியான பேரணியை ஏற்பாடு செய்தவர்களையும் பேரணியில் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்ட பொதுமக்களையும் மட்டுமல்லாமல் படையினரையும் ஆங்காங்கே காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸாரையும் பாராட்டியே ஆகவேண்டும்.

இந்தக் கண்டனப் பேரணி உணர்த்தும் மிக முக்கியமான மற்றோர் உண்மையையும் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

புலிகள் ஆயுதங்களால் பயங்காட்டித் தமிழ் பொதுமக்களை நினைத்தபடி ஆட்டிப் படைத்து வந்தார்கள். மற்றப்படி தமிழ்ப் பொதுமக்களின் பெரும்பாலானோர் உள்ளூரப் புலிகளை விரும்பவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு உண்டு. அது இந்தப் பேரணியோடு பொய்யாக்கப்பட்டுவிட்டது.

புலிகள் இப்போது ஆயுதங்களை உபயோகிப்பதில்லை. அப்படியிருந்தும் அவர்கள் அநியாயமாகத் தாக்கப்பட்ட செய்தி கேட்டதும் யாழ். குடாநாடே கொதித்து எழுந்து கண்டனப் பேரணி நடத்துகிறது. ஆயிரக்கணக்கான மக்கள், பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் பேரணியில். புலிகளோடு தமிழ்மக்களுக்கு உள்ள இதயபூர்வமான உறவுக்கு இதைவிட சிறந்த சான்று தேவையா?

## 9 மாதம் காவலில் இருந்த இளைஞருக்குப் பிணை!

கொழும்பு,ஜூன்29

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் மட்டக்களப்பு நாசகாரத் தடுப்புப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கன்னன்குடா கொத்தியாவலையைச் சேர்ந்த குடும்பஸ்தரான ரெட்ணசிங்கம் குலசேகரம் நேற்று மட்டு மேல் நீதிமன்றத்தில் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இவர் கடந்த 2001ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 5ம் திகதி மட்டக்களப்பு நாசகார தடுப்புப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடைசெய்யப்பட்ட ஏ.கே 47ரகத் துப்பாக்கிகள் இரண்டும் இதற்கான ரவைகள் பலதையும் தனதுஉடைமையாக வைத்திருந்தார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டு சந்தேக நபர் மீது மட்டக்களப்பு மேல்நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணை கடந்த புதனன்று மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இச்சந்தேகநபரைப் பிணையில் விடுதலை செய்யும்படி இவர் சார்பாக ஆஜராகியிருந்த சட்டத்தரணி மன்றைக் கோரினார். இதற்கு அரச சட்டத்தரணி ஆர்.கண்ணன் எதிர்ப்புத் தெரிவித்தமையினால் சந்தேக நபரை 30 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் இரு ஆள்பிணையில் விடுதலை செய்த நீதிபதி பிரதி ஞாயிறு தோறும் மட்டக்களப்பு நாசகாரத் தடுப்புப் பொலீஸ் நிலையத்தில் கையொப்பம் இடுமாறும் உத்தரவிட்டார். (ம)




## ஆவணமாகப் போற்றவேண்டிய ஒரு நூல் 'தேச வழமைகள்'

### தமிழகப் பேராசிரியர் வேதாசலம் கருத்து

யாழ்ப்பாணம்,ஜூன்29

தமிழ்நாட்டு வரலாற்றாசிரியர்களும் அரிய ஆவணமாகப் போற்றும் நூலாக விளங்குகிறது 'தேசவழமைகள்' எனும் இந்த நூல்.

பேராசிரியர் சி.பத்மநாதன் எழுதிய தேசவழமைகள் எனும் நூல் வெளியீட்டு விழாவில் அறிமுக உரையை நிகழ்த்திய தமிழ்நாடு தொல்லியல்துறைக் கல்வெட்டாய்வாளர் பேராசிரியர் வெ.வேதாசலம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஓர் இனத்தின் பாரம்பரியத்தினைப் பேணும் நூல்கள் மிகவும் கவனமாகப் பாதுகாக்கப்படுவது அவசியம். இந்தியாவில் கூட பெரிதாகக் குறிப்பிடத்தக்க அளவுக்கு இத்தகைய நூல்கள் காணப்படவில்லை.

சமூகத்தின் நடைமுறைகள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் என்பன பாதுகாக்கப்பட இலங்கையில் எடுக்கப்படும் முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

தேசத்தின் பாரம்பரியங்கள் பாதுகாக்கப்படுவதில் பேராசிரியர் சி.பத்மநாதன் கொண்டுள்ள ஆர்வத்தையே இந்த நூலின்மூலம் அறிய முடிகின்றது. இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு வரவேற்புரையை நிகழ்த்திய கலாநிதி ப.புஷ்பரட்ணம், தம்பையாவின் பின் தேசவழமை பற்றி சிறப்பாகத் தெளிவாக எழுதியுள்ளார் பேராசிரியர் சி.பத்மநாதன் - என்றார்.

வாழ்த்துரை வழங்கிய அருட்கலாநிதி பேராயர் எஸ்.ஜெபநேசன் அடிகளார் -

எமது பிரதேசத்து நீதிபதிகள் தமது வழக்கு விசாரணைகளின்போது இந்த நூல் ஒன்றைக் கட்டாயம் கையில் வைத்திருக்கவேண்டும். இன்று எமது நாட்டில் சுமுகமான ஒரு சூழ்நிலை உருவாகிவரும் வேளையில் இத்தகையதொரு நூல் அவசியமானதே - என்றார்.

இந்த நிகழ்விற்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமை தாங்கினார்.

பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா, பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் போன்றோரும் உரை நிகழ்த்தினர். (ம-12)

## வீதிகளில் தோண்டப்படும் குழிகளால் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்.நகரப் பகுதியில் ஆங்காங்கே வீதிகளில் தோண்டப்பட்டிருக்கும் குழிகளால் இரவில் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பாகத் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் பயணம் செய்வோர் மின்வெட்டு அமுலில் உள்ள நேரங்களில் வீதிகளில் தோண்டப்பட்டிருக்கும் குழிகளில் விழ நேரிடுவதாகக் கூறப்பட்டது.

அத்துடன் தோண்டப்பட்டிருக்கும் குழிகளுக்கு அருகில் குவிக்கப்பட்டிருக்கும் மண் மேடுகளில் மோதுண்டு விழும் நிலையும் ஏற்படுகின்றது.

பகல் வேளைகளில் இத்தகைய குழிகளால் மக்கள் பெரும் போக்குவரத்து நெருக்கடிகளையும் எதிர்கொள்கின்றனர்.(ம-12)

## அரசு - புலிகள் பேச்சுக்கு கனடாவின் ஆலோசனை

### பெறுவதற்கு அரசு முயற்சி

கொழும்பு,ஜூன்29

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான தாய்லாந்துப் பேச்சுக்களுக்கு கனடாவிடமிருந்து அரசியல் ஆலோசனை பெறப்படவிருக்கிறது.

ஒன்ராறியோ மாநிலத்தின் முன்னாள் முதல்வர் பொப்ரே என்பவரிடமிருந்து அரசு ஆலோசனை பெறவிருக்கிறது என்று கனடாவில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பொப்ரே தலைமை வகிக்கின்ற அமைப்பின் உதவியுடனும், கனடிய வெளிவிவகார அமைச்சின் அனுசரணையுடனும் தாய்லாந்துப் பேச்சுக்கு ஆலோசனை வழங்குவதற்கு பொப்ரே தயாராகிக் கொண்டிருக்கிறார் என்றும் ஹக்கீம் கூறினார்.

ரவூப் ஹக்கீம் கனடாவில் 24ஆம் திகதி மாலை பொப்ரேயைச் சந்தித்துப் பேசிய பின்னரே இவற்றைத் தெரிவித்தார்.(ம)

## ஓமந்தையில் இளைஞர்களை படம் பிடிப்பதை நிறுத்தவேண்டும்

### புலிகளின் பொறுப்பாளர் மேலவன் கோரிக்கை

கொழும்பு,ஜூன்29

வன்னியில் இருந்து செல்லும் இளைஞர்கள் வவுனியா ஓமந்தை சோதனை நிலையத்தில் ஸ்ரீலங்கா இரகசிய பொலீஸாரால் படம்பிடிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுவது நிறுத்தப்பட வேண்டுமென விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மேலவன் வவுனியா படைத்தளபதியிடம் கேட்டுள்ளார்.

இரகசியப் பொலீஸார் இளைஞர்களின் அடையாள அட்டைகளை பறித்து தனித்துப் பதிவுசெய்து விசாரணைக்கு உட்படுத்துவதும் படம் பிடிப்பதும் புரிந்துணர்வு உடன்பாட்டை மீறும் செயலென மேலவன் வவுனியா இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சூல செனிவிரட்ணவுக்கு தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த சூல செனிவிரட்ண இரகசிய பொலீஸாரின் இந்த நடவடிக்கை கடந்த அரசுக்காலத்தில் இருந்து தொடர்வதாகவும் இதனை நிறுத்துமாறு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிடவில்லையென்றும் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டால் இதனை தாம் நிறுத்தத் தயார் எனவும் தெரிவித்ததாக மேலவன் மேலும் கூறியுள்ளார். (ம)

### நாளை

ஆனி 16
ஞாயிற்றுக்கிழமை
(30.06.2002)
திதி : பஞ்சமி
காலை 6.21 வரை.
நட்சத்திரம்: சதயம்
மாலை 06.12 வரை.
சுபநேரம்: 8.56 - 10.26
ராகுகாலம்: 4.26 - 5.56
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மகத்தான மனிதர்கள் கருத்துக்களைப் பற்றி விவாதிக்கிறார்கள். சாதாரண மனிதர்கள் நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதிக்கிறார்கள். மட்டமான மனிதர்கள்தான் நபர்களைப் பற்றி விவாதிக்கிறார்கள்.

## புதிய 'வெட்' வரி அறவிடுதல் ஒரு மாதத்துக்கு பிற்போடப்பட்டது

கொழும்பு,ஜூன்29

அரசாங்கம் அறிவித்துள்ள 'வெட்'(VAT) எனப்படும் பெறுமதிசேர் வரி அறவிடுவது ஒருமாத காலத்துக்குப் பிற்போடப்பட்டது.

அதனால், இப்புதிய வரி அறவீடு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி அமுலுக்கு வராது.

வர்த்தக, நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ரவி கருணாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான விலைகளைக் குறைப்பது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதே புதிய வரி அறவீடு ஒத்திவைக்கப்பட்டதற்கான காரணம் என்றும் அமைச்சர் சொன்னார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மேலும் கூறியதாவது:-

குழந்தைகளுக்கான பால்மா விலை இரண்டு வாரங்களுக்குள் 99 ரூபாவாக குறைக்கப்படும். அத்தியாவசிய மருந்து வகைகளுக்கான 'வெட்' வரி முற்றாக நீக்கப்படும்.

எரிபொருள்களுக்கு எப்படி வரி விதிப்பது என்பது தொடர்பாக ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட குழுவினர் இன்னும் தமது இறுதிச் சிபார்சுகளை அறிவிக்கவில்லை.

பாதுகாப்பு வரி, ஜீ.எஸ்.ரி. என்பன ஒழிக்கப்பட்டு 'வெட்' வரி அமுல் செய்யப்படும். எக்காரணம்கொண்டும் இவ்வரி 30 வீதத்திற்கு மேல் அதிகரிக்கப்படமாட்டாது. காஸ் விநியோகம் இன்னும் 3 வாரங்களில் நாடெங்கிலும் நடை பெறும். அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளை சில கறுப்புச் சந்தை வியாபாரிகளே அதிகரிக்கின்றனர். அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - இவ்வாறு அவர் சொன்னார். (ம)

| | | | |
|---|---|---|---|
| | | சனி. ரா. | புத. சூ. செ. |
| சந். | இராசிச் சக்கரம் | | வி. வெ. |
| | | | |
| | கே. | | |

*மாற்றம்*

**30.06.2002 சதயம் - கும்பம் ராசியில் சந்திரன் நிற்கும் கடகத்தில் வியாழன் மாறும்.**

**06.07.2002 கடகத்தில் செவ்வாய் மாறும். சிங்கத்தில் சுக்கிரன் (வெள்ளி) மாறும்.**

அரசியலில் கொள்கைகள், திட்டங்கள் மாறலாம். அரசியல்வாதிகளிடையே அபிப்பிராயபேதம். ம...களின் தீர்ப்பு எதிர்பார்க்கப்படும் ஏமாற்றங்கள் எதிர்பார்த்ததே ... சிலர் வேதனைப்படுவர். ...னச் நாடுகளின் எதிர்பார்ப்... உலக கிழக்கு விளங்கவி... , வடக்கு - யிடுவது நியா... ...ந்நியர் தலை எழும். ...மா ...னக் குரல்கள் வள... ...ந்தியா - சீனா எமது ...களைச் சுரண்டலாமா? எனக் குரல்கள் எழும். மேற்கு நாடுகள் இஸ்ரேல் மூலம் பலஸ்தீன அரபு நாடுகளின் பொருளாதாரப் போக்கில் திட்டமிட்ட மாற்றங்களைச் செயற்படுத்தும். இந்து சமுத்திர, பசுபிக் சமுத்திரப் பிராந்தியப் பிரதேசங்களில் இயற்கையின் சீற்றத்தால் அழிவுகள் கொடுக்கும் எனக் கிரகங்களின் நிலைகள் காட்டுகின்றன.

# இந்த வார இராசி பலன்

## 30-06-2002 - 06-07-2002

### 30-06-2002 இல் வியாழன் கர்க்கட இராசிக்கு மாறும்

## மகாதேவர் ஜோதிடம்

### மேடம்

பழம் பழுத்தால்தான் பட்சிகள் அம்மரத்தைச் சுற்றிப் படையெடுக்கும். பணம் வந்தால்தான் சுற்றமும் சூழும். குற்றமும் தேடிவரும். இட மாற்றம் ஏமாற்றம் தரும். பணவரவு கம்மிதான். தொழில்ஸ்தானத்தில் எதிர்ப்பு ஏற்படும். இரவுநேரம் ஆபத்து வரலாம். பிரயாணங்கள், புதிய செய்திகள் என்பன வந்துசேரும். திடீர் கோபம், உஷ்ணவருத்தம், வயிற்றுக் குழப்பம், பூச்சிக்கடிவரும். பிறரின் ஆலோசனை கேட்க நேரிடும். பிரயாணத்துறை, மருந்துத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்- வியாழன், வெள்ளி, சனி.*

### இடபம்

பருவங்கள் மாறினால் மனிதர்கள், உயிர்களின் உடல், மனோபாவங்களும் மாறும். தொழில் ஸ்தானத்தில் நடக்கும் சம்பவங்களால் மனப்பதற்றம் ஏற்படும். இரக்கமற்ற செயல், பணவரவு, அதிகாரத்தனம், சகோதரங்களுடன் வாக்குக் கலகம், பெற்றோர் கலங்குதல் என்பன நடக்கும். அந்நியரின் பொருளால் அவமானம் ஏற்படும். நெஞ்சுநோ, தொண்டை வருத்தம், அடிகாயம், வாதவிறைப்பு, களைப்பு, சலிப்புவரும். தரகுத்துறை, மருந்துத்துறை, செய்தித்துறை, வீடியோத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்- வியாழன், வெள்ளி, சனி.*

### மிதுனம்

ஊர்க்குருவி உயரப்பறந்தாலும் பருந்தாக மாட்டாது. தொழில்ஸ்தானத்தில் சிலர் பெருமை காட்டிச் சிறுமை கொள்வார்கள். எதிர்ப்பாளருடன் நிதானமாகப் பேசவும். கெட்ட எண்ணம், வீட்டில் மனவேற்றுமை, அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைத்தல், சகோதரங்களுக்காக ஓடியாடித் திரிதல் என்பன நடக்கும். வயிற்று வருத்தம், வாய்வுப் பிடிப்பு, நாரிநோ என்பன வரும். தூரப்பிரயாணங்கள் சிலருக்கு ஏற்படும். நீதித்துறை, கோயில்துறை, பிரயாணத்துறை, செய்தித்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்- வியாழன், வெள்ளி, சனி.*

### கடகம்

எல்லோருக்கும் எல்லாம் கிடைத்தால் ஏன் பிரச்சினைகள் வருகின்றது? கிடைக்குமா? நினைத்ததைத்தான் சாதிக்கமுடியுமா? தொழில்ஸ்தானத்தில் ஒரு மந்தநிலை. நியாயம் கேட்டுக் கலக்குவீர்கள். மாறிவரும் உலகில் எதைத் தேடுவது என்ற பதற்ற நிலை, அடிக்கடி மனப் போராட்ட நிலை. புதிய ... உறவு, இன ஜன உதவி. அயல... ...ர் தூற்றுதல், பிறருக்கு ஆலோச... ...னை சொல்லல், நெஞ்சு பதறு... ...லவருத்தம், வயிற்றுக்கோளா... ...என்பன வரும். நீதித்துறை, ... வா...ி...பத்துறை, அரசியல் து... ...போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்- வியாழன், வெள்ளி, சனி.*

### சிங்கம்

சில... சிலதை அதிக காலம் மூடிமறைக்க முடியாது? உரிய நேரம் வெளிச்சத்திற்கு நிச்சயம் வந்து தீரும். தொழில்ஸ்தானத்தில் மாற்றங்கள் வரும். புதிய பொறுப்புக்களுக்கு ஆயத்தமாவீர்கள். சில ஏமாற்றங்களும் காத்திருக்கும். புதிய நட்பு, அயலவர்கள் உதவுவார்கள். பொருள் வரவு இருக்கும். குடும்பத்தினர்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். கைகால், நாரி உளைவு, வாய்வுத்தொல்லை ஏற்படும். ஏமாற்றம் கொடுக்கும். போக்குவரத்துத்துறை, கடல்துறை, ஆராய்ச்சித்துறை, குருத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்: வியாழன், வெள்ளி, சனி.*

### கன்னி

தொடக்குவர் சிலர். தொடக்குவதை இடைநடுவில் நிறுத்தி விடுபவர் பலர் - இது எதனால்? இயலாமையா? சோம்பலா? தொழில்ஸ்தானத்தில் புதிய மாற்றங்கள் ஏற்படும். குடும்பத்தினரிடையே கருத்து வேற்றுமை. மேலதிகாரிகளால் உதவி கிடைக்கும். காசு பொருளால் வேதனை வரும். வாய்வுத் தொல்லை வரும். குருத்துறை, வங்கித்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்களுக்கும் கடல்தொழில், நீதித்துறை, செய்தித்துறை, வீடியோ, கணனி போன்ற துறையினர்களுக்கும் நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: வியாழன், வெள்ளி, சனி.*

### துலாம்

தர்மம் என்றும் தோற்காது- உறுதியாளர்கள் இறுதிவரை தயங்காது தொடர்வார்கள். தொழில்ஸ்தானத்தில் பல மாற்றங்கள் கொடுக்கும். மாற்றங்கள் சர்வசாதாரணம். தூரத்துச் செய்திகள் வரும். ஆடை, ஆபரண, வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். பொருளால் யோசனை வரும். உஷ்ண பீடைகள், கை,கால் தாக்கம், குடல் வருத்தம், சளித்தொல்லை, வாய்வுப் பிடிப்பு என்பன வந்து தொல்லை தரும். வியாபாரத்துறை, குருத்துறை, சட்டத்துறை, சந்தைத் துறை போன்ற துறையினருக்கு பல மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்: வியாழன், வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

இயற்கையின் சித்தம் இதுதான் என்றால் எவரால் மாற்றமுடியும்? காலநேர மாற்றம் கொடுக்கும். தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவுவார்கள். காசு, பொருள் வரவு இருக்கும். புதிய நட்பு ஏற்படும். பொருள், களவுகள் இடம்பெறலாம். புதிய செய்திகள் வந்து மனமகிழ்ச்சி கொடுக்கும். புதிய பொறுப்பு, வீட்டில் கலகலப்பு ஏற்படும். அயலவர்கள் உதவிக்கு வந்து உபத்திரவம் தரலாம். நாரிப்பிடிப்பு, சலவருத்தம், வாய்வுத்... ...தொல்லை என்பன வரும். குருத்துறை, பிரயா... ...ணத்துறை, மருந்துத்துறை போன்றதுறையி... ...ருக்கு மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.*

### தனுசு

மூடி மறைத்ததெல்லாம் மாறி வெளிவருமெனச் சிலர் எண்ணுவதில்லை. வந்தால், புதிய திட்டங்களால் நன்மை, வருமான அதிகரிப்பு ஏற்படும். குடும்பத்தில் கருத்துவேற்றுமை போட்டிகள் வரலாம். வீடு, வாகன யோகங்கள் ஏற்படும். அரச உதவி, மேலதிகாரிகளின் உதவி என்பன கிடைக்கும். பிரயாணத்தால் நன்மைகள் ஏற்படும். வயிற்றுநோ, இடுப்புவலி, உஷ்ணபீடைகள், தடுமாற்றம் என்பன வரும். நீதித்துறை, குருத்துறை, விவசாயத்துறை, மின்சாரத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்கள், நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, வெள்ளி.*

### மகரம்

காகிதத்தில் வருவதெல்லாம் கருத்தில் வருவதில்லை. விதி இடைவழியில் நின்று மறிக்கும். காதலிப்பவர்கள் எல்லாம் கலியாணம் செய்வதுமில்லை. கலியாணம் செய்பவர்களெல்லாரும் காதலிப்பவர்களும் இல்லை. எல்லாம் விதி விட்ட சந்தர்ப்ப வழிகள்தான். தொழில்ஸ்தானத்தில் ஓடிவரும் அலைவால் மனம்மாறி ஏமாறாதீர்கள். புதிய திட்டங்களால் நன்மை வரும். தடுமாற்றம் ஏற்படும். வருமானம் அதிகரிக்கும். நாரிப்பிடிப்பு மூட்டுவலி தலைவலி, வாதப்பிடிப்பு என்பன வரும். பிரயாணத்துறை, குருத்துறை போன்றதுறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, வியாழன், சனி.*

### கும்பம்

சில தரகர்கள் கிரகங்களை மாற்றி பொருத்தத்திற்குக் கொடுக்கின்றார்கள். சில சோதிடர்கள் பொருத்தத்தை தவறாகக் கணித்துக் கொடுக்கின்றார்க... ...ா. மக்கள் உண்மைகளை அறிய... ...து அலைகிறார்கள். இப்படியாக உ... ...ங்கள் தொழில் ஸ்தானத்தில் பல த... ...வறுகளைச் சிலர் பொருளுக்காகச்... செய்தபடி இருப்பார்கள். தொ... ...டை வரட்சி, பயப்பாடு, ... ...னை, கால்வருத்தம் போன்றன ... ...நும். பிரயாணங்களைத் தவிர்க்கவு... ...ம். புதிய துறைகளை நாடி ஓட ... இடம் உண்டு. கடல்துறை, வியாபா... ...ரத்துறை, நகைத்துறை, குருத்து... ...ற போன்ற துறையினர்கள் நன்... அடைவார்கள்.

*...திர்ஷ்ட நாள்: ஞாயிறு, வியாழன், சனி.*

### மீனம்

ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு பலன் உண்டு. தாயறைக்குப் பக்கத்தில் தகப்பன் அறை இருக்காத வீட்டில் என்றும் பிரச்சினைகள் பல உருவாகியபடி இருக்கும். தொழில்ஸ்தானத்திலும் முகாமையாளருக்கு ஒரு காரிய தரிசி இருப்பதில்லையா? வீட்டின் பலன் குடும்பத்தவர்களைத் தாக்குவது போன்று தொழில் ஸ்தானத்தில் ஏற்படும் மாற்றம் உங்களையும் பாதிக்காது விடாது. வீடு வாகன யோகம் வரும். அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். பிரயாண நன்மை. தூரதேச செய்திகள் என்பன வரும். சளி, கால், நாரி உளைவு, வாய்வுத் தொல்லை என்பனவரும். குருத்துறை, சட்டத்துறை, மருந்துத் துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு,வியா.,சனி.*

---

# வன்னியில் நிர்வாகப் பணிகளுக்கு ஐம்பது பட்டதாரிகள் தெரிவு!

யாழ்ப்பாணம்,ஜூன்29

வன்னியில் நிர்வாக நிறைவேற்றுப் பணிகளுக்காக யாழ்.மாவட்டத்தில் இருந்து 50 பட்டதாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அண்மையில் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சை மூலம் இவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிமுதல் 2 மணிவரை யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளோர் பெயர் விவரங்கள் வருமாறு:-

சி.கஜேந்திரன் (முல்லைத்தீவு), ஜோ.எமில்ராஜன் (யாழ்ப்பாணம்), வெ.சர்வானந்தன் (சாவகச்சேரி), சி.சத்தியசீவன் (வட்டுக்கோட்டை), வை.தனநாதன் (தெல்லிப்பழை), செ.ஜெசிக்குமார் (முள்ளியவளை), அனுஷா.ப (திருநெல்வேலி), கலைந்தினி.ப (நீர்வேலி), யோ.கிளைவ் பெல்சியா (யாழ்ப்பாணம்), அன்ரனீறா.அ (யாழ்ப்பாணம்), ஜான்சிராணி.கு. (வட்டுக்கோட்டை), து.சசிகரன் (வல்வெட்டித்துறை), அ.இன்பராஜ் (பருத்தித்துறை), இ.அம்பிகைபாகன் (திருநெல்வேலி), க.வசந்தன் (வல்வெட்டித்துறை), ச.பாலகுமார் (கரவெட்டி), பே.கணேஸ்குமார் (கந்தர்மடம்), வாசுகி.தி (நல்லூர்), கௌரி.யோ (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), விமலரஞ்சினி.க (திருநெல்வேலி), சோ.சுகிர்தன் (ஏழாலை), க.சந்திரகுமார் (சங்கத்தானை), நி.பிரபாகரன் (நாவாந்துறை), செ.பத்மாநந்தி (கொக்குவில்), க.கிருபானந்தி (மானிப்பாய்), விசித்ரா.து (சாவகச்சேரி), செ.நிர்மலரங்கன் (கொக்குவில்), இ.விக்னராஜ் (உரும்பிராய்), மோகனமாலா.அ (ஆனைக்கோட்டை), சத்தியவேணி.த (பருத்தித்துறை), அனுஷமலர் (கொடிகாமம்), ஜெயசிந்தா.கி (கரவெட்டி), கணேஜினி.க (வட்டக்கச்சி), பவானி.க (கரவெட்டி), கலாவதி.வே (சங்கானை), ஜீவராணி.இ (கோப்பாய்), சுதர்சினி.க (கரவெட்டி), பத்மஜோதி.ப (மானிப்பாய்), கவிதா.த (நல்லூர்), சுதர்சினி.து (யாழ்ப்பாணம்), கயல்விழி.ந (வட்டக்கச்சி), செல்வமதி.இ (கரவெட்டி), சி.திருக்குமரன் (சித்தன்கேணி), இ.நாகநாதன் (சாவகச்சேரி), சோ.வைகுந்தவாசன் (பொற்பதி), அ.ஜெனிபேட் (கொக்குவில்), க.குணசீலன் (புதுக்குடியிருப்பு), ஜெ.ஜெயரூபன் (முல்லைத்தீவு), தி.விஜயமனோகரன் (புதுக்குடியிருப்பு), வீ.உதயகுமார். (அளவெட்டி).

(ம)

---

### மீளக்குடியமர்வோருக்கு

# அடிப்படை வசதிகளைச் செய்துகொடுப்பதில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்

## ஊர்காவற்றுறை பிரதேச செயலர் கோரிக்கை

ஊர்காவற்றுறை,ஜூன்29

தற்பொழுது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்து வரும் மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம்.

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் ஊர்காவற்றுறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இலவச சித்த ஆயுர்வேத நிலையத்தைத் திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

குடாநாட்டுக்கான தரைவழிப் பாதை திறக்கப்பட்டதையடுத்து ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் 472 குடும்பங்கள் தற்பொழுது மீளக்குடியமர்ந்துள்ளன. எதிர்வரும் ... ...வும் 600 குடும்பங் ... மாதங்களில ... ...களைச் சேர்ந்தோர் மீளக்குடி... வரென எதிர்பார்க்கப்படுகிறது.

- இவ்வாறு மீளக்குடியமர வருபவர்கள் உடனடியாகத் தமது சொந்த வீடுகளில் குடியமர முடியாத நிலை உள்ளது. பலரது வீடுகள் சேதமடைந்தும், முற்றாக அழிந்த நிலையிலும், கவனிப்பாரற்ற நிலையில் பற்றைகள் மண்டியும் காணப்படுகின்றன.

எனவே, இத்தகைய குடும்பங்களைப் பொது இடங்களில் வைத்து பராமரிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். எனவே, இத்தகைய குடும்பங்களுக்கு உணவு, குடிதண்ணீர் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன்மூலமே மீளக்குடியமரும் மக்களின் நலன்களை சிறந்த முறையில் பேணமுடியும் - என்று தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் கு.கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கிராமசேவகர்கள், சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(எ-16)

---

# கட்டுரைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்29

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் தமிழ் மன்றத்தினால் யாழ்.மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் இன்று கல்லூரியில் நடைபெறும் தமிழ் ...விழாவில் வைத்து பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என ...விக்கப்பட்டது.

... ...இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம், பிரிவு ரீதியாக வருமாறு:-

**ஆரம்பப்பிரிவு**

வ.ஹேரசிகா(புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), லோ.தர்சிகன்(கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.), ந.தார்மீகன் (யாழ்.பரியோவான் கல்லூரி).

**கீழ்ப்பிரிவு**

சி.ஜெயதீபன்(அச்சுவேலி மத்திய கல்லூரி), வி.விஜயகுமாரி (மானிப்பாய் மெமோறியல்), கி.பிரதீபன்(மானிப்பாய் மெமோறியல்).

**மத்திய பிரிவு**

பு.தேவரஞ்சனா(சங்கானை சிவப்பிரகாச ம.வி.), ப.ஜனனி(மீசாலை வீரசிங்கம் ம.வி.), கி.விக்னேஸ்வரி (மானிப்பாய் மெமோறியல்)

**மேற்பிரிவு**

க.சுவா... (...மீசாலை வீரசிங்கம் ம.வி.), சோ.சுவர்ணஜா (முதலுத் தம்பி ம.வி.), வி.நாயினி(நாயினாதீவு ம.வி).

(எ-10)

# ஆதரவற்ற சிறார்களுக்கு அன்புக்கரம் நீட்டும் சைவ வித்தியாவிருத்திச் சங்க சிறுவர் இல்லம்

திருநெல்வேலி என்னும் சிற்றூரை ஊடறுத்துச் செல்லும் கலாசாலை வீதி முன்னே சைவாசாரிய பயிற்சிக் கலாசாலை ஒன்றை நோக்கிச் சென்றமையால் இப்பெயர் பெற்றது. யாழ்ப்பாணத்திலே பலருக்குக் கல்விக் கணகளைத் திறந்துவிட்ட பெரியார், இந்து போர்ட் இராசரத்தினம் நீண்டகாலமாக ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாகத் தொண்டுப்பணி செய்தவர். அவா கட்டிக்காத்துக் கையளிப்புச் செய்த நிறுவனமே சைவ வித்தியாவிருத்திச் சங்கம். கலாசாலையையும் முத்துததம்பி வித்தியாலயத்தையும் சு. இராசரத்தினம் திறமையாக நிர்வகிதது வந்தார். ஆனால், காலச் சூழலிலே சிக்கி சைவ ஆசிரிய கலாசாலை மூடப்பட்டபோது திருநெல்வேலிச் சமூகம் வாய்மூடி மௌனியாக நின்றது. மூடிய கலாசாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கு சைவ

> **முனைவர்**
> **மனோன்மணி சண்முகதாஸ்**
> *இல்லத்திட்டப் பணிப்பாளர்*
> *சைவ வித்தியாவிருத்திச் சங்கம்*
> *திருநெல்வேலி.*

வித்தியாவிருத்திச் சங்கத்திற்கு எந்த நிறுவனமும் தோள்தரமுன்வரவில்லை. எனினும் பெரியார் இராசரத்தினம் பேணி வளர்த்த முத்துத்தம்பி அனாதை இல்லம் மூடப்படாமல் தொடர்ந்து இயங்கியது. போரின் விளைவுகளையும் இடப்பெயர்வையும் தாங்கிக்கொண்டு இன்னமும் பூங்குருவிகளுக்கு அடைக்கலம் தந்து நிற்கறது. ஆதரவற்ற, அன்பைத் தேடுகிறை 200 சிறுவர்களைப் பேணுகின்ற நிறுவனமாக இன்று சைவ வித்தியா விருத்திச் சங்கம் உலகெங்கும் அறியப்பட்ட நிறுவனமாகத் தொண்டுப் பணியைத் தொடர்கிறது. முத்துத்தம்பி அனாதை இல்லம் சைவச்சிறுவர் வதியும் இல்லமாக 'நிறைவாழ்வு இல்லம்' என்ற இலக்கை நோக்கி இயங்கிக் கொண்டிருக்கிறது.

இல்லத்துக்குப் பிள்ளைகளை அனுமதிப்பதில் சிறுவர் நன்னடத்தை அதிகாரியும், நல்லூர் பிரதேச செயலகமும் திட்டப் பணிப்பாளரும் இணைந்தே செயற்பட வேண்டியுள்ளது. இல்லத்திலே சேர்க்கவேண்டிய பிள்ளையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் தாம் வாழும் பிரதேசத்து கிராமசேவகரின் உறுதிப்பாட்டைப் பெற்றுப் பிரதேசச் செயலரின் பரிந்துரையுடன் சென்று சிறுவர் நன்னடத்தை அதிகாரியின் நேர்காணலில் நிலைமையைத் தெளிவுபடுத்த வேணடும். சிறுவர் நன்னடத்தை அதிகாரி யாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து 3 ஆண்டுகள் இல்லத்தில் வாழ முதலில் பரிந்துரை செய்வார். நல்லூர் பிரதேச செயலகம் எழுத்து மூலமான அனுமதியை வழங்கிப் பிரதியைச் சைவச்சிறுவர் இல்ல நிர்வாகத்திற்கு அனுப்பிவைக்கும்.

அனுமதிக்கடிதத்துடனும், ஆவலுடனும் சிறுவர்களைக் கையில் பிடித்தபடி கலாசாலை வீதியிலே நடந்துவரும் பிஞ்சுக் கால்கள் எதையும் முடிவு செய்ய முடியாத குஞ்சுகள். இல்லத்து வாழ்க்கை பற்றிக் கிடைத்த துளச் செய்திகளை, மனதிலே அசைபோட்டபடி ஆடிவரும் கோலம் 'சைவ வித்தியாவிருத்திச் சங்கம்' என்ற பெயர்ப்பலகையைக் கண்டு மனம் நிறைய உள்நுழையும் உருவங்கள். செருப்பின்றி வெயிலில் நடந்த வேதனை கண்களில் தெரிய, நீர் நிறைந்த பாத்திரத்தைத் தேடும் கண்களுக்கு விருந்தாக ஒரு பிளாஸ்ரிக் வாளி. மூடியின் மேலே ஒரு வெள்ளிக் குவளை. அதனைக் கண்டதும் சில கைகள் கூசிநிற்கும் கொடுமையைக் காணும்போது உள்ளம் ஒரு முறை விறைக்கும். 'தண்ணீர் நிறையக் குடிக்கலாம்' என்று சொன்னால் போதும் சிறுவர்களும் பாதுகாவலரும் ஆவலாய் நீரைப் பருக விறைத்த உளளம் மீண்டும் சிலிர்க்கும். களைபபுத்தீர, அனுமதி தொடர்பான அறிவுறுததல்கள் தொடரும். கேட்டு மனம் வாடும் தாய், தந்தை, பாதுகாவலரிடம் பரிவுகாட்ட முடியாத நிலையில் நிறுதிட்டமாகவே சொற்கள் வாயிலிருந்து வெளிவரும். இங்கே பணி செய்பவர்கள் பிள்ளைப் பாசம் அற்றவர்களா என்று எண்ணி மனம் பொருமுபவர் பலர் உள். கல்லுக்குள்ளும் ஈரம உண்டென்பதைப் பின்னரே அவா உணர்வர்.

ஆனால், எல்லாவற்றையும கேட்டுச் செவியிலே நிறைத்து நிற்கும் சிறுவரிடமும் கேள்வி கேட்கப்படும். 'இந்த இல்லத்திலே எங்களோடு தங்கியிருந்து படிக்க விருப்பமா?' குரலில் கனிவைக்காட்டி முகத்தில் கருணையைத் தேக்கி உள்ளத்திலே வந்து உதைக்கும் துயரத்தை மறைத்து வாய் வழியே கேள்விக் கணையைச் செலுத்தும்போது எதிரிலும் என்னைப்போல எல்லாவற்றையும மறைதது முகத்தில் தேடல் மிளிர கண்களில் உறுதிதெரிய தலையைச் சாய்த்து 'ஆம்' என்ற விடையைத் தரும் அற்புதமான தொடர்பாடல் யாரும் அறியாதது. சாய்ந்த தலையை மெல்லக் கையால் நிமிர்த்தி விழியால் மௌனமாக அணைத்துக் கொள்ளும்போது தெய்வ தரிசனம் செய்த மனநிறைவு கிடைக்கிறது.

அதன் பிறகு சிறுவர் அமைதியாக இல்லத்துள் நுழைகிறார்கள். கூட்டி வந்தோர் விழிக்கடையில் சுரக்கும் நீர் விரைவில் வற்றிவிடும். நிறைவாழ்வு இல்லத்தின் வெளிப்புற வாயிலை மட்டும் காணும் பலர் அதை ஒரு சிறைக்கூடமெனத் தவறாக எண்ணுவதும் உண்டு. ஆனால், இந்த இல்லம எமக்கு ஏற்ற இடம் என்பதைச் சிறுவர்கள் விரைவிலேயே உணர்ந்து கொள்ளுகின்றனர். சிறுவர் 6 வயது முதல் சேர்த்துக்கொள்ளப்படுவதால் கல்வி கற்கும் தொடக்க நிலையே, அவர்களுக்கு ஓர் ஒழுங்கில் அமைய வாயப்பு ஏற்படுகிறது. பள்ளிக் கல்வியின் நிலையை உணரவும், அதற்காகச் சில முன்னோடிப் பயிற்சிகள் தேவை என்பதை அறியவும் முடிகிறது. இல்லத்தின் நாளாந்த நடைமுறைகளால் அவர்கள் புதிய பயிற்சியைப் பெறுகிறார்கள். காலத்தோடு ஒட்டி இயங்கும் இயற்கையான செயற்பாட்டில் பழக்கப்படுகிறார்கள். ஒருநாளின தொடக்கத்தையும் முடிவையும் இயறகை நிலையிலே உணர்கிறார்கள். பகலையும் இரவையும் நன்கு பகுத்து அறிநது தொழிற்படும் பக்குவம் பெறுகிறார்கள். பண்டைக்கால மரபான குருகுலக் கல்வியின் தொடர்ச்சியாக இல்லத்து நடைமுறைகள் உளளன. அதிகாலையிலே எழுந்து இறை வழிபாட்டுடன் தமது கடமைகளைத் தொடஙகும் சிறுவர்கள், கூட்டு முயற்சியின் பயனை அநுபவத்தால் அறிந்து கொள்கின்றனர். தாம் வாழும் இல்லத்தையும் சுற்றுப்புறச் சூழலையும் தூய்மையாக வைத்திருக்கவேண்டும் என்ற ஆவலோடு கடமைகளைச் செய்கின்றன. குழு நிலையிலே இணைந்து அந்தப் பிஞ்சுக்கரங்கள் சூழலைத் தூய்மை செய்கின்றன. தன்னைக் காட்டிலும் உயரமான கூட்டுமாறு கொண்டு முற்றத்தைக் கூட்டும் ஒவ்வொரு சிறுவனும் 'என்னால் இதைச் செய்ய முடியும்' என்ற தன்னம்பிக்கையோடு தொழிற்படுவதைக் காணும்போது உள்ளம் பரவசப்படுகின்றது. அவர்கள் கடமை செய்யும் போது உடன் நின்று பாராட்டினால் போதும் அந்த சின்ன முகங்களில் ஆயிரம் தாமரை மலரும். அது எமக்குப் புதிய இன்பம் தருகிறது.

உணவுப் பழக்கம் சிறுவர்க்கு உயர்ந்த கொடைப் பயிற்சியாக உளளது. எங்கள் உணவு மண்டபத்தின் பெயர் பொங்கல் மண்டபம். தைப்பொங்கல் நாளன்று திறந்து வைக்கப்பட்டதால் அப்பெயரைப் பெற்றது. மேலும் நாளும் சோறு பொங்குவதாலும் பொருத்தமான பெயராக அமைந்தது. 200 பிள்ளைகளும் ஒரே நேரத்தில் உணவருந்த ஏற்ற வசதியை அரிமாக் கழகம் செய்து தந்துள்ளது. ஆண்களும், பெண்களுமாய் அனைத்துக் குழந்தைகளும் ஒன்றாய் இருந்து களிபபுடன் அருந்த உணவுக் கொடை வழங்கும் வள்ளல்கள் உலகெங்கும் இருக்கிறார்கள். அவர்கள் வழங்கும் கொடையில் மதிய உணவு சத்துணவாக - விருப்பமான உணவாக - சிறுவர் வயிற்றை நிரப்பி வாழ வைக்கிறது. சில வேளைகளில் உணவுக் கொடை வழங்குவோரும் சிறுவர்களுடன் உடனிருந்து உண்ணும் வழக்கமும் உண்டு. உணவு உண்ணத் தொடங்கு முன்னர் பாடப்படும் 'அன்னம் பாலிக்கும்.....' என்ற தேவாரம் சிறு குரல் வழிவந்து செவியிலே சேரும்போது கொடையாளர் நெஞ்சம் சிலிர்க்கும். கொடையின் பயன் நன்கு உணரப்படும்.

இல்லறச் சிறாரின் புறநிலைக் கல்வியாகச் சில பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மரவேலை, சமையல், தையல், கைவினைக் பொருள் தயாரிப்பு, கோலம், பண்ணிசை, வீட்டுத் தோட்டம், பசு வளர்ப்பு போன்ற பயிற்சிகள் தற்போது நடைபெறுகின்றன. உயர்கல்வி வாய்ப்புப் பெறாத சிறுவர் இப்பயிற்சிகளால் எதிர்காலத்தில் பயன்பெறுவர். பெண் குழந்தைகளே தொகையில் கூடியவராக இருப்பதால் இப்பயிற்சிகளை மேலும் விரிவாக்கம் செய்யவேண்டியுள்ளது. இல்லத்து வாழ்வை முடித்து இளைஞராக சமூகத்துள் நுழையும்போது சூழ்நிலையில் அவர்கள் தொழிற்பட சில தொழில் நிலையங்களையும் சைவ வித்தியா விருத்திச் சங்கம் திட்டமிட வேண்டியுள்ளது. குறிப்பாக பெற்றோர் அல்லது பாதுகாவலர் அற்ற சிறுவர் வளர்ந்த பின்பும் குடும்பம்போல இணைந்து வாழலாம். மேலும் எமது மரபில் இன்னமும் 'அநாதை இல்லத்தில் வாழ்ந்தவர்' எனத் தரக்குறைவாய் நோக்கும் நிலை முற்றாக மாறிவிடவில்லை. இத்தகைய மரபுக் கயிற்றில் தொங்கும் மனிதர்களை நேரில் காணும் எமது இல்லச் சிறார்களின் மனம் ஒடிந்துவிடக்கூடாது. 'இட்டார் பெரியோர், இடாதோர் இழிகுலத்தோர்' என்ற ஒளவை மூதாட்டியின் முதுமொழியே எமதுகவசம். மனிதனை மனிதனாக நோக்குவதே எமது பார்வை. அன்பும் தொண்டுமே எமது தோள்களின் சுமைகள். இதுவே எமது இல்லச்சிறார் நினைவில் பதிய நாம் முயற்சி செய்கிறோம். எமது முயற்சிக்கு இடையூறு ஏற்படும் வேளைகளில் எமது வழிகாட்டியான பெரியார் இந்து போர்ட் இராசரத்தினத்தை நினைக்கின்றோம். மனச்சோர்வு அகல மீண்டும் தொண்டுப் பணியில் இணைகின்றோம். சைவ வித்தியா விருத்திச் சங்கம் அண்மையில் பவளவிழா ஆண்டினை நினைவு கூர்ந்தது. பெரியார் இந்து போர்ட் இராசரத்தினத்தின் சிலையையும் பணிமனை வளவிலே நிறுவியது. இல்லச் சிறாரின் உள்ளத்திலே அவருடைய பணியை ஆழமாகப் பதிய வைக்க இது உதவிற்று. இன்னும் அவர் பெயரில் ஆண்கள் இல்லம் அழைக்கப்படுவதும், அவர் நினைவை நாளும் சிறார் பெறவாய்ப்பு அளிக்கிறது. இடப்பெயர்வினால் சிதைந்த கட்டடங்கள் சீர் பெற்றுள்ளன. தொண்டு நிறுவனங்களின் உதவியால் 3 புதிய மண்டபங்கள் உருவாகியுள்ளன. இருந்தும் இல்லத்தில் சேர விரும்பும் சிறார் தொகை நாளும் தொடர்கிறது. 200 பேருக்குமேல் இடவசதி இன்மையால் சிறாரை ஏற்பதில் எமக்கும் இடைஞ்சல்கள் பல இருக்கின்றன. பொருள் வளமும் போதாது. ஒரு சிறுவனுடைய மாதாந்த பராமரிப்புச் செலவு சிக்கனநிலையில் மாதம் 3000 ரூபா ஆகிறது. 200 பேருடைய ஒருமாதச் செலவு 6,00,000 ரூபா ஆகிறது. இப்பணத்தைப் பெறுவதற்கு நிரந்தரமான வருவாய் எதுவும் இப்போது இல்லை. இல்லம் அரசாங்கப் பதிவு பெற்றிருப்பதால் ஒரு பிளளைக்கு மாதம் 300 ரூபா கிடைக்கிறது. இப்பணம் மாதச் செலவில் பத்திலொரு பங்கையே ஈடுசெய்ய முடியும்.

இல்லத்தில் சேர விரும்பும் சிறுவர்களை இடம் இல்லையெனக் கூறி மறுப்பது எமக்கு மிகத்துன்பமாக உள்ளது. போரின் கொடுமையால் குடும்பத்தலைவனை இழந்த குடும்பத்தில் குழந்தைகளின் ஒரு வேளை உணவையே பெற்றுத்தர முடியாத ஏழ்மை நிலையில் தாய்மார் வருந்துகின்றனர். தமது குழந்தைகளில் ஒன்றாவது இல்லத்தில் சேர்ந்து, வயிற்றுப்பசி தீர்த்து வாழட்டும் என்ற நினைப்போடு எமது பணிமனை வாசலில் வந்து வரம் கேட்பவர்போல நிற்கிறார்கள். தாயின் மனக்கவலையை நானும் தீர்ப்பேன் என்ற உறுதியோடு வீட்டையும், உடன் பிறபபுகளையும் பிரிந்து வாழ உறுதிபூண்டுவரும் பூங்குருவிகளைக் காணும் போது உள்ளம் மாய்ந்து போகிறது. தன் அன்பான அரவணைப்பையே தியாகம் செய்ய முன்வந்த அந்த சின்னக்குருவிக்கு அடைக்கலம் தரவேண்டும் என ஆர்வம் மேலிடுகிறது. அதற்காக அனைவரிடமும் 'மடிப்பிச்சை ஏந்து' என மனம் ஏவ முயற்சி தொடங்குகிறது. நாளைக்கு இச்சிறுவன் மனிதர் துயர் தீர்க்க வந்த மனுக்குல வள்ளலாக மாறுவான். முதுமை எம்மை வந்து தழுவும்போது எமக்கெல்லாம் முதுகெலும்பாய் நின்று உதவுவான். எமது மனிதப் பிறவியின் மாண்பினை, உயிர்காக்கும் பண்பினை, நட்புடன் உறவாடும் பாங்கினை அனைவரும் அறியப் பணி செய்வான். இன்று எமது இல்லத்திலே வாழ்ந்து நல்ல மனிதராக எங்கெங்கோ வாழ்பவர் தமது சிறுவர் நிலை வாழ்வின் செம்மையை உணர்ந்து, கொடை நல்கி வருவது எமககு இதனை உறுதிப்படுத்துகிறது. அதுவே எம் பணியைத் தொடரப் புதுவலியும், ஆற்றலும், உளநிறைவும் தந்துநிற்கிறது என்பதில் ஐயமில்லை.

☆

## பொருள்வளம் படைத்தோரே வருக!
## சிறாரின் நலன்பேண உதவிகள் செய்க!!

# திரைக்கதை எழுத்தாளர்களுக்கான பயிற்சி முகாம் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஜூன்29

திரைக்கதை எழுத்தாளர்களுக்கான பயிற்சிமுகாம் ஒன்று எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

'ஸ்கிரிப் நெற்' என்னும் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்தப் பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ளது.

'ஸ்கிரிப் நெற்' திட்டம் தொடர்பாக விடுக்கப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

'ஸகிரிப் நெற்' அமைப்பின் திரைக கதை எழுத்தாளர்களுக்கான பயிற்சி முகாம் அண்மையில் கொழும்பில் முடிவடைந்தது. இதன் இறுதிக்கட்டப் பயிறசிகளான திரைக்கதையை கட்டமைத்தல் மற்றும் தொழில்நுட்ப வகுப்புகள் ஏப்ரல் மாதம் முடிவடைந்தன. இப்பாடத் திட்டத்திற்கெனவே தெரிவுசெய்யப்பட்டுள்ள 12 எழுத்தாளர்களும் தமது திரைக்கதைகளை ஒழுங்குபடுத்தி 'ஸ்கிரிப் நெற்' திட்டததின் இறுதிக்கட்டத் தேர்வுக்குச் சமர்ப்பிக்க இன்னும் இரண்டே மாதங்கள் உள்ளன.

இத்திறமைமிக்க எழுத்தாளர்கள் ஈடுபட்டிருக்கும் அனைத்து திரைக் கதைகளும் அசலானவை மட்டுமன்றி, இலங்கைப் பிரதேசத்தை சேர்ந்தவையுமாகும். இவற்றில் பெரும்பாலானவை இலங்கையின் கலாசாரத்தையும் இதற்கு முன் நாம் திரையில் காணாத வாழ்க்கைமுறையையும் பிரதிபலிக்கின்றன. ஒவ்வொரு பிரதியும் (ஸ்கிரிப்ட்) 15 நிமிடங்களுக்கு குறைவானதாகும்.

இநத இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள 12 பிரதிகளில் 5 பிரதிகளே தெரிவு செய்யப்பட்டு 'Scriptnet' இணைய தளத்தில் (www.scriptnet.org.uk.) சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் இவை 'Scriptnet' இணையத்தள ஆலோசனைச் சபையின் நுட்பமான மீளாய்வுக்கும் உட்படும். இவ்வாறு இலைமறைகாய்களாகவுள்ள எழுத்தாளர்களின் படைப்புக்களை வெளியீடு செய்ய இங்கிலாந்தின் திரைக்கதை எடிட்டர்கள், தயாரிப்பாளர்கள், முன்னணிச் சினிமா கம்பனிகள் மற்றும் பி.பி.சி.சனல் 4, கால்டன், ஸ்தாபனங்கள் என்பவையும் தனியாரும் முன்வந்துள்ளனர்.

இந்த நீண்டகால அபிவிருத்தி திட்டத்தின் இறுதியில் இப்பிரதிகள் ஓர் உயர்ந்த நிலையை அடைந்து தயாரிப்புக்கு ஏற்ப மற்றும் நிதி முதலீடு கோரக்கூடிய நிலையை இவ்வருட இறுதியில் அடையும். எங்களுடைய எதிர்பார்ப்பு இலங்கை மற்றும் இங்கிலாந்திலுள்ள முதலீட்டாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் இத் திரைக்கதைகள் மற்றும் குறும் படங்களுக்கு திரைவடிவம் கொடுத்து உதவுவார்கள் என்பதே.

டிசெம்பர் 2002 வரை வெற்றியாளரின் பெயர்அறிவிக்கப்படமாட்டாது. உள்ளூர் கதைகள் மற்றும் தமிழ் எழுத்தாளர்களும் திரைக்கதை எழுதும் போட்டிகளில் பங்குபற்றும் முகமாக ஸ்கிரிப்நெற் ஒக்ரோபர் 2002இல் யாழ்ப்பாணத்திலும் இவ்வாறான ஒரு பயிற்சி வகுப்பை நடத்தத் தீர்மானிதத்துள்ளது. பின்னர் அனைத்து நுழைவுதாரர்களிலும் இருந்து வெற்றியாளர் தெரிவுசெய்யப்படுவார்.

"நாங்கள் கொழும்பு மற்றும் கண்டியிலிருந்து கிடைக்கப்பெற்ற மிகச் சொற்பமான விண்ணப்பங்களையிட்டு ஏமாற்றம் அடைந்துள்ளோம். வடக்கில் எழுத்தாளர்கள் தமது குரல் மற்றவர்களுக்கு கேட்கவும் தமது கதைகளை மற்றவர்களுக்குத் தெளிவுபடுத்தவும் தேவைப்பாடு உள்ளது. சமாதான நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியினால் யாழில் 'ஸ்கிரிப்நெற்' திட்டத்தின் மறுபிரவேசம் ஓர் ஊக்கமுள்ள ஒன்றாக எதிர்பார்க்கப்படுகிறது" என்று ஸ்கிரிப்நெற் திட்ட நிர்வாக அதிகாரி கதரீன ஸ்டெட்மென் தெரிவித்தார். 'ஸ்கிரிப்நெற்' பிரிட்டிஷ் ஹவுன்சில், கலதாரி ஹோட்டல் ஆகியவற்றின் உறுதுணைக்கு என்றும் நன்றியுடையதாகவுள்ளது. அவர்களுடைய முதலீடு இன்றி இத்திட்டம் இயலுமான ஒன்றாக அமைந்திராது. மற்றும் எமது விருந்தாளி நிறுவனமான இலங்கை ஊடகத்துறை பயிற்றுவிப்பு நிறுவனத்துக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கும் அதேவேளை, அவர்களுடன் கூட்டிணைந்து இனிவரும் காலங்களிலும் செயறபட எதிர்பார்க்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோயில்
# தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் ~ 29.06.2002

## நல்லை ஆதீன முதல்வர் அருளுரை

விநாயக அடியார்களே!

திருநெல்வேலி தலங்காவல் பதியில் எழுந்தருளி இருக்கும் விநாயகப் பெருமான் இன்று ரதத்தில் எழுந்தருளி அருங்காட்சி தருவது. அனைவருக்கும் மகிழ்ச்சியை தருகின்றது. விக்கினங்களை நீக்கும் விநாயகப் பெருமான் ஆன்மாக்களைப் பற்றி இருக்கும் மாயை அகற்றும் பொருட்டு தேரில் எழுந்தருளுகின்றான். ஆலயங்களில் நடைபெறும் விழாக்களில் தேர்த்திருவிழா முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. அஞ்ஞான இருளை நீக்கி மெஞ்ஞான ஒளியை ஏற்படுத்துவதே தேர்த்திருவிழா. அரிய பிறவியாகிய மானிடப் பிறவியின் முழுமையான பயனைப் பெற்றுத்தருவது ஆலய பயனாகும். ஆலயத்தில் நடைபெறும் பூஜைகளும் விழாக்களும் மனிதனை மனிதநேயத்தோடு வாழ வழி சமைக்கின்றன. இதனை உணர்ந்த எம்முன்னோர் ஊர்கள், நகரங்கள், கிராமங்கள் தோறும் ஆலயங்களைக் கட்டுவித்தனர். இவ்வரிசையில் பெருமை சேர்க்கும் தலங்காவல் பிள்ளையார் ஆலயம் இன்று பல வளர்ச்சிகளைக் கண்டு மக்களின் ஆன்மீக வாழ்வுக்கு வழிகாட்டியாக உள்ளது. இந்நிலையை நெறிப்படுத்தும் அனைவரையும் வாழ்த்துகின்றோம். தேரேறும் விநாயகப் பெருமானை அனைவரும் வழிபட்டு வாக்கும் நல்ல மனமும், நல்ல நோக்கும் அடங்காத மேனியும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
*நல்லை ஆதீனம், நல்லூர்.*

## விநாயகரின் அருளினால் சமாதானம் மலர்ந்திடுக!

யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியில் கோயில் கொண்டு அருள் சுரக்கும் தலங்காவற் பிள்ளையாருக்குக் கொடியேற்றம் நிகழ்ந்து, மஹோற்சவம் நடைபெற்றுவரும் இப்புண்ணிய நாள்களில் எம்பெருமானைத் தரிசித்து அருள்பெறும் வாய்ப்பு அடியார்களுக்குக் கிட்டியுள்ளமை தவப்பயனேயாகும். மஹோற்சவம் இறைவனது ஐந்தொழில் தத்துவங்களை விளக்கிநிற்பது. மஹோற்சவ காலத்தில் அனைத்து உயிரினங்களுக்கும் இறைவனது சாம்பவி தீட்சை கிட்டும். மஹோற்சவத்தின் உன்னத விழாவாக அமைவது தேர்த்திருவிழாவாகும். இது பிரம்மோற்சவம் எனச் சிறப்பிக்கப்படுவது. ஆன்மாக்களிடையேயுள்ள ஆணவமலத்தையழித்து நல்லருள் பாலிப்பதற்கு இறைவன் தேரில் எழுந்தருளி உலா வருகின்றான் என்பதே தேர்த்திருவிழாவின் தத்துவம்.

கண்கண்ட முழுமுதற் கடவுளாகிய விநாயகப் பெருமான் தேரில் எழுந்தருளி வருவது அற்புதமான காட்சியாகும். பிரணவப் பொருளின் வடிவமாக விளங்கும் விநாயகரை இப்புண்ணிய நாளில் தரிசிப்பதனால் நாம் செய்த தீவினைகள் நீங்கி புனிதர்களாவோம். ஆலய அறங்காவலரினதும் அடியார்களினதும் சிவாச்சாரியார்களினதும் கூட்டு முயற்சியின் அம்சமாக நடைபெறும் இத்தேர்த்திருவிழாவில் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி தேரின் வடந்தொட்டு இழுத்து அவனருளைப் பெறும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

இப்புனித நாளில் எங்கும் சாந்தியும் சமாதானமும் மேலோங்கி, அடியார்கள் அனைவரும் சகல வளங்களுடனும் இனிதே வாழ எம்பெருமானின் திருவருள் பொலிவதாகுக என வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர்
*கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்.*

## அறங்காவலரின் ஆசி

ஈழத்திருநாட்டின் வடபால் உள்ள யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலிப் பதியிலே கோயில் கொண்டெழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ தலங்காவற்பிள்ளையாருக்கு வைகாசி மீ 30ஆம் திகதி (13.06.2002) வியாழக்கிழமை தொடக்கம் கொடியேற்றம் நடைபெற்று தொடர்ச்சியாக மற்றைய திருவிழாக்கள் அடியார்களின் உதவியோடு சிறப்பாக நடைபெற்று வருகின்றது.


17ஆம் திருவிழாவாகிய தேர்த்திருவிழா இன்று (29.06.2002) சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளதால் விநாயகப் பெருமானின் அருள் எல்லாருக்கும் கிடைக்க வேண்டும் என்று ஆசி கூறுகின்றேன்.

ச.கனகசபாபதி ஐயர்,
*ஆலயப்பிரதமகுரு, அறங்காவலர்.*

(C/22737)

*மலர் சிறப்புற வாழ்த்துவோர்:*
செ.பாலசிங்கம் குடும்பத்தினர்
வ.இராசையா குடும்பம்
த.மோகன்ராஜ்

## தலங்காவலான் அற்புத விநாயகன்



யாழ்ப்பாணக் குடாநாட்டில், சகல சிறப்புக்களையுடையதும், சிறந்த கல்விமான்கள், புலவர்கள், ஞானப்பிரகாச முனிவர் முதலிய மிகச் சிறப்புடைய பெரியோர்களைத் தன்னகத்தே கொண்ட பெருமை பெற்றதுமான திருநெல்வேலியெனும் ஊரில் தம்மை மெய்யன்புடன் வந்து வணங்கும் அடியார்களின் இடர்போக்கி நற்கருணை பாலிக்கும் தெய்வமாகிய தலங்காவற் பிள்ளையார் அமர்ந்திருக்கின்றார்.

அவருக்குத் திருநாமங்கள், இன்னுமிரண்டு அறியக்கூடியதாக இருக்கின்றது. ஒன்று இந்தப் பெருமானுக்கு, 1840ஆம் ஆண்டில் ஊரிலுள்ள சில அடியவர்களால் தருமசாதனமாகக் கொடுக்கப்பெற்ற காணியுறுதியில், ஸ்ரீ காயாரோகண மூத்தநயினார் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இரண்டாவதாக இந்தப் பெருமான் எழுந்தருளிய ஆலயத்தில் கிழக்குப் பக்கமாக ஒரு பழைமையான அனிஞ்சில் மரம் இருந்ததாகவும், அதனால் பெருமானை அனிஞ்சிலடிப் பிள்ளையாரெனக் கூறப்பட்டதாகவும் ஒரு வயதுசென்ற முதியவர் எனக்குச் சொன்னார்.

அந்தக்காலத்தில் கோயில் செங்கற்களினால் கட்டப்பட்டு இருந்தது. பின்னர் நமது பெரிய தந்தையார் ஞானசேகரக்குருக்கள் வைத்தீஸ்வரக்குருக்களின் காலத்தில் (நான் கல்வி கற்கும் காலம்) 1918ஆம் ஆண்டு பங்குனி மாதம் ஊரிலுள்ள ஒரு மகானாலும் கல்லினால், கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மஹாமண்டபமாகிய மூன்றும் கட்டிமுடிக்கப்பெற்று ஊரிலுள்ள அடியார்களது உதவியோடு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

எனது காலத்தில் நான் அறிந்த அவருடைய திருவருள் செயல்கள் அளவிடற்கரியவை. அவற்றுள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

எனது காலத்தின் முன் இங்கு கொடியேற்றி உற்சவம் செய்வதற்கு ஒரு வித தளபாடங்களோ, அடுக்குகளோ இருக்கவில்லை. ஊரிலுள்ள ஓர் அடியாருடைய வீட்டில் செப்புத் தகடுகள் இருந்தன. அந்தப் பெரியவர் காலமாகிய பின் சந்ததி இல்லாமையினால் அவரது உறவினர்கள் தங்களுக்குள் சமாதானமாக எல்லாப் பொருள்களையும் பகிர்ந்து எடுத்துக்கொண்டனர். செப்புத் தகட்டை ஒருவரும் எடுக்கவில்லை. அன்றிரவு அவர்கள் நித்திரையாகவிருக்கும் சமயம் பெருமான் அவர்களெல்லோரதும் கனவில் தோன்றி காலஞ்சென்ற பெரியவரது பெயரைச் சொல்லி அவருடைய பொருள்களில் எனக்கு பங்கு இல்லையா என்று கேட்டார். உங்களுக்கு என்ன வேண்டும் என்று அவர்கள் கேட்டபோது கொடிஸ்தம்பத்திற்குச் செப்புத் தகட்டைத் தாருங்கள் எனக் கூறினார். மறுநாள் அதிகாலை அவர்கள் எல்லோரும் என்னிடம் வந்து பிள்ளையாருடைய கருணையை வியந்து கூறி அந்தத் தகட்டை எடுத்துக் கோயிலுக்குக் கொண்டு வரும்படி கேட்டுக்கொண்டார்கள். அதை உடனேபோய் ஏற்றிக்கொண்டுவந்து கோயிலில் வைத்துவிட்டு ஊரவர்களின் பொருளுதவியுடன் கொடிஸ்தம்பம் செய்து 1934ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் கொடிஸ்தம்பம் நாட்டப்பட்டது.

அந்தக்காலத்தில் ஒருநாள் பூசை செய்வதற்கு திருவமுதுக்கு அரிசி இல்லாததால், மனம் வருந்திப் பெருமானை நினைத்து அப்பனே! நீ அரிசியும் தரவில்லை. கையில் காசும் தரவில்லை. உன்னுடைய பூசையை எவ்வாறு நான் செய்யப்போகிறேன் என்று சொல்லும் சமயம், நல்லூரிலுள்ள சின்னப்பா பிள்ளை இராமநாதன் என்பவர் தனது காரில் சுத்தம் செய்த 3 புசல் பச்சரிசி சாக்கில் போட்டு எனது வீட்டிற்கு அனுப்பிவைத்தார். பூசை குறைவின்றி நடந்தது.

ஊரிலுள்ள ஒரு பெரியாருடைய வீட்டில் சபிண்டீகரணம் நடைபெற்றது. அதில் சொல்லப்பட்ட முறைப்படி மிகவும் தாராளமாக எல்லாம் தந்தார்கள். அப்போது என்னுடைய மனதில் ஒரு எண்ணம் தோன்றியது. பெருமானை நினைத்து இந்த அரிசி, காய்கறி, வேட்டி, சால்வை இவையெல்லாம் எத்தனை நாள்களுக்கு. இதில் உனக்குப் பிரயோசனப்படக்கூடிய பொருள் ஒன்றுமில்லையே என நினைத்துக்கொண்டு எழுந்தேன். உடனே கிரியை செய்தவர் சற்று நிற்கும்படி சொல்லி வீட்டினுள் போனார். திரும்பிவரும்போது கையில் மிகவும் நன்றாக உள்ள ஒரு செம்புடன் வந்து அதை என்னிடம் தந்து பிள்ளையாருக்குக் கொண்டுபோய் வையுங்கள் எனச் சொன்னார். எம் பெருமானுடைய திருவிளையாடலை நினைந்து மனம் பூரித்தேன்.

1942ஆம் ஆண்டு ஆனி மாதம் பிள்ளையாருடைய தேர்த்திருப்பணி நிறைவெய்தி வெள்ளோட்டவிழா முடிந்ததும் கோயில் வாசலிலுள்ள உவர் நீருடைய கிணறு நன்னீராக மாறியதை எல்லோரும் அறிவர். கால் மைல் சுற்றாடலில் உள்ளோர் தங்களுடைய பாவிப்புக்காக இன்றும் இந்தக் கிணற்றிலேயே நீர் எடுத்துச் செல்வதைப் பார்க்கக்கூடியதாக உள்ளது.

இவ்வாலயத்தில் 1918ஆம் ஆண்டு நடந்த கும்பாபிஷேகத்தின் பின், 1948ஆம் ஆண்டு பங்குனி மாதம் சில திருத்தங்கள் செய்து சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதன் பின்னர் இருபது வருஷம் கழித்து, பிள்ளையாருக்குச் சாத்திய அஷ்டபந்தன மருந்து பழுதற்றதனால் சம்புரோக்ஷணை செய்யவேண்டுமென நினைத்து ஓர் அடியவரிடம் சொன்னபோது ஏளனமான முறையில் கதைத்தார். எனக்கு அவருடைய நினைவு விளங்கிவிட்டது. மனவேதனை தாங்காமல் நேராக மூலஸ்தானம் சுவாமி சந்நிதியில் போய் "அப்பனே! இவ்வளவு காலமும் உனக்குப் பூசை செய்து வருகிறேன். என்னிடம் பொருள் இல்லையென்பதால் தானே அவர் இவ்வாறு சொன்னார். நீ பொருள் உள்ளவர்களிடம் சொல்லி உனது கும்பாபிஷேகத்தை நடத்து" என முறையிட்டுத் திரும்பினேன். சில நாள்கள் சென்றன. அதன் பின் ஒருநாள் இரவு எம்பெருமான் கனவில் தோன்றி இரண்டே வார்த்தைகள் கூறி அருளினார். அதாவது பங்குனி மாதம் பாலஸ்தாபனம் செய்து வைகாசி 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகம் செய்யலாம். அவர் கூறியவாறு யாரும் எதிர்பாராத வகையில் பங்குனி மாதம் பாலஸ் தாபனம் நடந்தது. சித்திரை மாதம் முழுவதும் திருநெல்வேலி காயாரோகண சுவாமி கோயில் கொடியேற்றத்துடன் முடிந்தது.

வைகாசி மாதம் 7ஆம் திகதி பூங்காவன உற்சவம் முடிந்து வீடு வந்தேன். எனது வீட்டிலுள்ளவர்கள் நல்லூரிலுள்ள ஓர் அம்மையார் என்னை வந்து விசாரித்ததாகச் சொன்னார்கள். நான் உடனே அவர் வீட்டிற்குச் சென்றேன். என்னை உட்கார வைத்து, தான் சொர்ப்பனம் கண்டதாகவும் பிள்ளையாருடைய திருப்பணியை நடத்திக் கும்பாபிஷேகத்தையும் செய்து அடுத்த சில நாள்களில் வரும் கொடியேற்ற மஹோற்சவத்தையும் தவறவிடாது செய்யும்படியும் கேட்டுக் கொண்டார்.

### அமரர் சிவஸ்ரீ ந.சண்முகரத்தினக் குருக்கள்

நான் சந்தோஷத்துடன் திரும்பிவந்து அடுத்த நாளே திருப்பணி வேலைகளை ஆரம்பித்து பரிவாரமூர்த்தியாக ஒரு சனீஸ்வரப் பெருமானுக்கும் ஒரு சந்நிதானம் அமைத்து திருவருள் துணையினால் திருப்பணி வேலைகள் செய்து 1968ஆம் ஆண்டு வைகாசி மாதம் 29ஆம் திகதி பிள்ளையாருடைய ஆஞ்ஞைப்படி மூன்றாம் முறையாக முன்னரிலும் பார்க்க மிகவும் சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது.

சென்ற காலங்களில் நடந்த சில அசம்பாவிதங்கள் காரணமாக பல அடியார்களின் தாராளமான பொருள் உதவியினாலும் அவர்கள் ஒத்துழைப்பினாலும் 1988ஆம் ஆண்டு ஆனி மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை மிகவும் சிறப்பாகப் பெருமானது திருவருள் துணையினால் கும்பாபிஷேகம் இனிது நடைபெற்றது. இந்தக் கும்பாபிஷேகத்துடன் எனது காலத்தில் எனக்குத் தெரியக்கூடியதாக நான்காவது கும்பாபிஷேகம் ஆகும்.

எல்லா அடியார்களும் விநாயகப் பெருமானின் திருவருளினால் சகல செல்வங்களையும் தீர்க்க ஆயுளையும் பெற்று நீடூழி காலம் வாழ்வார்களாக!
(1988ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கும்பாபிஷேக மலரிலிருந்து மறுபிரசுரம்)

### இனியனே தலங்காவலானே....

அரசு பூவரசு ஆலொடு வாகை
அனைத்து முன்வீதியிற் படர்ந்து
பெருநிழலில் பரப்பிப் பொலிந்து தெய்வீக
புண்ணிய மென்னவே செழிக்கும்
கருநிறை சோலை தலமதாம் நல்ல
தலங் காவற் பதியினில் மேவி
வருமடியசர்க்கு வரம்பல வழங்கும்
வள்ளலே வணங்கு கின்றோம் நாம்!

கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா,
தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.


கலை வண்ணமுடைய
தேர், மஞ்சம், கைலாசவாகனம்
மற்றும் வாகனங்கள் அமைப்பவர்கள்
**ஆறுமுகம் சிற்பாலயம்**
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

**விநாயகர் சிற்பாலயம்**
"கந்தகோட்டம்",
தலங்காவற் பிள்ளையார் கோயிலடி,
திருநெல்வேலி மேற்கு.
*உரிமையாளர்:*
கலாபூஷணம் ஸ்தபதி சு.இராசரத்தினம் ஆச்சாரியார்

அழகு சாதன பொருள்களின் கூடம்
**சிந்திகா பான்ஸி**
கேணியடி,
திருநெல்வேலி.

**கண்ணன் லொட்ஜ்**
இல.6, சேர் பொன்.இராமநாதன் வீதி,
பல்கலைக்கழகச் சந்தி, திருநெல்வேலி.

**மந்தாகினி தொலைத்தொடர்பு நிலையம்**
K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
T.P.No.: 3500

**சுதர்சன் மருந்தகம்**
சேர் பொன்.இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

**ஸ்ரீ அரைக்கும் ஆலை**
இல. 303, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

**ஆராதனை பந்தல், வீடியோ சேவை**
சிவன் கோயிலடி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
*உரிமையாளர்:* தணிகாசலம்.

**கரன் ரெக்ஸ்ரைல்ஸ்**
பலாலி றோட்,
திருநெல்வேலி,
T.P.No.: 2142/2697

**Bala Sports Club**
Bala Sports,
Ramalingam Road,
Thirunelvely East, Thirunelvely.

**கரன் தொலைத்தொடர்பு நிலையம்**
அம்மன் றோட்,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
T.P.No.: 3729

**ஐங்கரன் சூ பலஸ்**
பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

### பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில்

# போதியளவு இடவசதி இன்மையால் மாணவரை உள்வாங்குவதில் சிக்கல்

## கல்விச் சமூகம் உதவவேண்டும் என்கிறார் அதிபர்

யாழ்ப்பாணம்,ஜுன்29

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் போதிய இடவசதி இல்லாத காரணத்தால் புதிய கல்வி ஆண்டுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் ஒரு தொகுதியினரை உள்வாங்கமுடியாதநிலைமை ஏற்பட்டுள்ளது.

- இவ்வாறு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் சதாசிவமூர்த்தி தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:-

எமது கலாசாலை பலாலியில் இருந்து இடம்பெயர்ந்த பின்னர் தற்போது திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயக் கட்டடத் தொகுதியில் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது.

தற்போது பாடசாலை மாணவர்களுக்கு இடவசதி போதாமல் இருப்பதால், எம்மை வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதேசமயம், ஆசிரியர் பயிற்சி பெறும் மாணவர்களுக்குப் போதிய இடவசதிகளுடன் கூடிய ஓர் இடத்தை எமக்குத் தெரிவுசெய்து தர யாழ்ப்பாணக் கல்விச் சமூகம் முன்வருவதாகத் தெரியவில்லை.

இந்த நிலைமையில் எமது கலாசாலை புதிய கல்வியாண்டுக்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், விவசாயம், உடற்கல்வி, றோமன் கத்தோலிக்கம் ஆகிய 6 பாடநெறிகளுக்கென 129 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான விரிவுரை வகுப்புகளின் தொடக்க நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை -

எமது கலாசாலையில் ஆரம்ப கல்வி பயிற்சிநெறிக்காக 152 ஆசிரிய மாணவர்களை மேலதிகமாகச் சேர்த்துக்கொள்ளுமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அவர்களுக்கும் திங்கட்கிழமையே விரிவுரைகள் ஆரம்பிக்கப்படவேண்டும். ஆனால், அவர்களுக்கான விரிவுரை வகுப்புகளை நடத்துவதற்கு எம்மிடம் வகுப்பறை வசதிகள் இல்லை. இதனால் அவர்களை உடனடியாக எம்மால் உள்வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக எமது நிலைமையைத் தெளிவுபடுத்தி வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளோம். அதில் இரண்டு மாற்று ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளோம். அதன் பிரகாரம் எமக்கு இடவசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் பட்சத்தில் ஆரம்பக் கல்வி பயிற்சிநெறிக்குத் தெரிவாக மாணவர்களையும் உள்வாங்கமுடியும்.

இடம்பெயர்வுகளின் மத்தியிலும் பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் இயங்கிவரும் எமது கலாசாலை ஆசிரிய மாணவர்களின் நிலைமையை குடாநாட்டு கல்விச் சமூகம் உணர்ந்து எமக்கு உதவ முன்வரவேண்டும் - என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (ம-6)

### திருட்டுக் குற்றத்துக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம்

வலி.வடக்கு,ஜுன்29

10ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரத்தைத் திருடிச்சென்றவருக்கு 3 ஆயிரம் ரூபா குற்றமும், இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரு வருட கடுழிய சிறைத் தண்டனையும் மல்லாகம் மாவட்ட நீதிமன்று விதித்துள்ளது.

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த தங்கராசா றனேஸ்குமார் கடந்த மே மாதம வட்டுக்கோட்டை சிவன் கோயிலுக்கு அண்மையில் உள்ள க.மங்களேஸ்வரன் என்பவரின் வீட்டில் திருடியதாகக் கூறி மானிப்பாய் பொலீஸார் இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர். (எ-86)

### வீதிகள் சேதம்

வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி - ஆழியவளை பிரதான வீதி, மருதங்கேணி - மாமுனை பிரதான வீதி, தாளையடி - புதுக்காட்டு வீதி ஆகியன மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன.

மக்கள் இப்பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்ததையடுத்து இவ்வீதிகளில் போக்குவரத்துக்கள் அதிகரித்துள்ளன. வீதிகள் சேதமடைந்துள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

மருதங்கேணி - ஆழியவளை வீதி 20 வருடங்களுக்கு மேலாகச் செப்பனிடப்படாமல் உள்ளது.(ம-182)

# தரைப்பாதை ஊடாக மரப்பலகைகள் வரும்

யாழ்ப்பாணம்,ஜுன்29

யாழ்.அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு முதற்றடவையாக ஒரு தொகுதி மரப்பலகைகள் எடுத்து வரப்படவுள்ளன.

நாளைமறுதினம் திங்கட்கிழமை இரண்டு லொறிகளில் இந்த மரப் பலகைகள் எடுத்துவரப்படவுள்ளன.

புதன்கிழமை தொடக்கம் அவை பொதுமக்களுக்கும், ஏனைய நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்படும் என்றும் மரக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 12 வருடங்களின் பின்னர் தரைப்பாதையூடாக குடாநாட்டுக்கு மரப்பலகைக்கள் எடுத்துவரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கப்பல் மூலமாக குடாநாட்டுக்கு கடந்த சில வருடங்களாகப் பலகைகள் எடுத்துவரப்பட்டபோதிலும் அவை பொதுமக்களின் தேவைகளுக்கு போதுமானதாக இல்லாத காரணத்தால் பல புனரமைப்புப் பணிகள் தடைப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை -

எதிர்காலத்தில் குடாநாட்டுக்குத் தேவையான மரங்கள் அனைத்தும் விரைவாக தரைவழிப்பாதையூடாக எடுத்துவரப்பட்டு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-6)



இணுவிலைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி அப்பையாவின் ஞாபகார்த்தமாக அவரின் குடும்பத்தினர் இணுவில் மத்திய கல்லூரிக்கு பாண்ட் வாத்தியக் கருவிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இதன்போது எடுக்கப்பட்ட படம் இது.

பாண்ட் வாத்திய கருவிகளை வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா பாடசாலை அதிபர் துரை எங்கரசிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் அன்னாரின் குடும்ப உறுப்பினர்களான அ.சோமசுந்தரம், செ.இலகுநாதன் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-ரி)

# சில்லறைத் தட்டுப்பாடு ஓரிரு மாதங்களில் நீங்கும்

யாழ்.குடாநாட்டில் இருந்துவரும் சில்லறை நாணயத் தட்டுப்பாடு இன்னும் ஓரிரு மாதங்களில் நீங்கிவிடும் என மக்கள் வங்கியின் வடவலயப் பொது முகாமையாளர் எஸ்.இளம்பிறைநாதன் தெரிவித்தார்.

சில்லறை நாணயப் பற்றாக்குறையைப்போக்க பெரும் சிரமங்கள், செலவுகளுக்கு மத்தியில் கொழும்பிலிருந்து அவ்வப்போது சில்லறை நாணயங்களை எடுத்துவந்து மக்கள் வங்கிக் கிளைகள் ஊடாக வர்த்தகர்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கியுள்ளோம்.

எனினும் சில்லறை நாணயப் பற்றாக்குறை தீர்ந்தபாடில்லை. எனவே கொழும்பிலிருந்து சில்லறை நாணயங்களை மேலும் எடுத்துவரவுள்ளோம். ஓரிரு மாதங்களில் இதன் பற்றாக்குறை தீர்ந்துவிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-173)

### நூல் அறிமுகவிழா

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் நூற்று மூன்றாவது பிறந்த தினத்தை முன்னிட்டு 'கம்பராமாயணக் காட்சிகள்-II' நூல் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பண்டிதை பொன்.பாக்கியம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வாழ்த்துரையை அருட்கவி சீ.விநாசித்தம்பி நிகழ்த்துவார்.(எ-72)

### உபஅலுவலகம் மீண்டும் சொந்த இடத்தில்

பருத்தித்துறை பிரதேச சபையின் உப அலுவலகம் மருதங்கேணிப் பிரதேசத்திலுள்ள செம்பியன்பற்று தெற்கில் எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் இயங்கவுள்ளது.

மருதங்கேணிப் பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளை அடுத்து மேற்படி அலுவலகம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து புலோலியில் உள்ள பருத்தித்துறை பிரதேச சபைக் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கிவந்தது.

தற்போது மருதங்கேணிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர ஆரம்பித்துள்ளதை அடுத்து மேற்படி அல்வலகம் செம்பியன்பற்று தெற்கில் இயங்கவுள்ளது. (எ-182)



வடலியடைப்பு - கனடா ஒன்றியத்தின் ஆதரவில், வடலியடைப்பு நலன்புரி கல்வி நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றபோது 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இவ்வாறு சித்திபெற்ற மாணவி ஒருவருக்கு வலியடைப்பு - கனடா ஒன்றியத்தின் கணக்காய்வாளர் இ.இராஜேஸ்வரனின் பாரியார் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ-135)

### யாழ்.ஆஸ்பத்திரியில் உள்ள

# பழைய கட்டடங்களை புனரமைத்து நவீன வசதியுடன் அமைத்துத் தருக

## ஜப்பான் நிறுவனத்திடம் கடிதம் மூலம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜுன்29

யாழ்.போதனா வைத்தியசாலையின் சகல கட்டடங்களையும் மீளப் புனரமைப்புச் செய்து அவற்றை நவீன வசதிகளைக் கொண்ட கட்டடங்களாக அமைத்துத் தருமாறு கோரி யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் சுகாதாரத் திணைக்களத்தையும், ஜப்பான் நாட்டின் ஜெக்கா நிறுவனத்தையும் கடிதமூலம் கேட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்போது பாவனையில் உள்ள கட்டடங்கள் பல்வும் பழைய க்ட்டத்தொகுதிகளாகவே காணப்படுகின்றன.

எனவே, மேற்படி கட்டடங்களை கட்டமைப்பு முறையான கட்டடத் தொகுதிகளாக்கி, நாட்டின் தென் பகுதி வைத்தியசாலைகள் போன்று வடிவமைத்து, நவீன வசதிகளுடன் கூடியதாக மாற்றித் தர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

வடபகுதியில் உள்ள அதேவேளை சகல வசதிகளுடனும் கூடிய இவ்வைத்தியசாலையினை நவீன வசதிகள் கொண்டதாக உருவாக்குவதன் மூலம் வடபகுதி மக்கள் பெரும் நன்மை அடையக்கூடியதாக இருக்கும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடிதம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுமானால் நவீன மாடிகளைக் கொண்டதும், வீதிகளைக் கொண்டதுமான புதிய கட்டடங்கள் யாழ்.ஆஸ்பத்திரியில் அமைக்கப்படும் என்று ஆஸ்பத்திரி நிர்வாக உத்தியோகத்தர் 'உதயனுக்கு' தெரிவித்தார். (எ-180)

# குடாநாட்டில் விரைவில் மழைநீர் சேகரிப்புத் திட்டம்

யாழ்.குடாநாட்டில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொண்டுவருகிறது.

மேற்படி திட்டத்தை முதற்கட்டமாக தீவுப் பகுதியில் ஆரம்பிப்பதற்கான தகவல்கள் தற்போது திரட்டப்பட்டு வருவதாக ஜி.ரி.இசற் வட்டாரங்கள் தெரிவித்தன.

சேகரிக்கப்படும் மழைநீரை சுத்திகரித்த பின்னர் சுமார் 6 அல்லது 7 மாதங்களுக்கு சமையல் மற்றும் குடிதண்ணீர்த் தேவைகளுக்குப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன

இது தொடர்பாக, சேகரிக்கப்படும் மழைநீரை எவ்வாறு சுத்திகரிப்பது குறித்து விரைவில் முடிவு செய்யப்படும்.

சேரிக்கப்படும் மழை நீரைப் பயன்படுத்தும் வகையில் போதிய கருவிகள், ஆலோசனைகள் பொது மக்களுக்கு வழங்கப்படும் - என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-180)

### கல்விச்சேவை ஆணைக்குழு

# அங்கீகாரம் வழங்கினால் மட்டுமே தொண்டர் ஆசிரியருக்கு நியமனம்

## பாடசாலைக் கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஜுன்29

கல்விச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் இல்லாது, பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் பொறுப்பு கல்வி அமைச்சுக்கு இல்லை.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரநிமல ராஜபக்ஷ.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நாட்டின் கல்விக் கொள்கையைத் தயாரிப்பதில் அரசாங்கம் நடைமுறையில் உள்ள சட்டங்களையே பின்பற்றி வருகின்றது. எதிர்கால நடவடிக்கைகளை உரியமுறையில் நடைமுறைப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம்.

நாடு பூராவும் சுமார் 2லட்சம் ஆசிரியர்கள் தற்பொழுது சேவையாற்றி வருகின்றனர். புதிய திட்டத்தின்கீழ் நாடெங்கும் உள்ள சனத்தொகை விகிதாசாரப்படி இவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

எதிர்காலத்தில் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் ஏற்பட்டால் மட்டுமே அவரவர் தகுதியின் அடிப்படையில் கல்விச் சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் தொண்டர் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்கப்படும்-என்றார் அமைச்சர். (எ-10)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன Dobermann Pincher ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபால சிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5350)

7 நாள் நிரம்பிய Broiler குஞ்சுகள், சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். எம்மிடம் Broiler குஞ்சுகள் கொள்வனவு செய்வோரிடம் மட்டும் திரும்ப இறைச்சிக் கோழிகள் பெற்றுக் கொள்வோம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5348)

கறுப்பு நிற பொமனேரியன் ஆண நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 124, கோயில் வீதி (I.C.R.Cக்கு அருகில்), யாழ்ப்பாணம். (5341)

Gold fish மற்றும் Pearl, Carps clearner fish, ஸ்னோபி (Blue, Brown), ஏஞ்சல் என்பன விற்பனைக்கு உண்டு. விலை 75/- upwards தொடர்பு: இல.169, மருத்துவ பீடம் முன்பாக, திருநெல்வேலி. (5345)

ஆபிரிக்க லவ்பேட்ஸ், ஜாவாப் பரட், விஞ்சேஸ் குருவிகள், பல இனங்களில் கலர் மீன்கள், மீன்தொட்டிகள், மோட்டர்கள், மீன்தொட்டிக்குரிய அழகுசாதனப் பொருள்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (5293)

18-XXXX தொடர் இலக்கமுடைய Brand New (புதிய) சொகுசு கார் விற்பனைக்கு உண்டு. (பெற்றோலிலும், காஸ் (LP Gas) இலும் ஓடக் கூடியது. அத்துடன் டாக்டரின் பாவனையில் உள்ளது. தொடர்பு: 18/12, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (முன்னைய ஈழநாதம் காரியாலயம் முன்பாக). (5359)

## வீடு விற்பனைக்கு

இல.24, கச்சேரி - நல்லூர் பிரதான வீதியுடன் சகல வசதிகளும் கூடிய கச்சேரிக்கு அண்மையாகவும் அமைந்துள்ள 21/2 பரப்புக் காணியுடன் அமைந்த வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பொ. விமலநாதன், இல.7, கற்பக விநாயகர் வீதி. கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (5147)

## மருந்துகள் விற்பனைக்கு

ஆடு, மாடு, கோழிகள், நாய்களுக்குரிய சகல மருந்து வகைகளும் விற்பனைக்கு உண்டு. Calciveyxol (M.F.C), Raniket, Gambora, Parro, Distember ஊசி மருந்துகளும் உண்டு. தொடர்பு: க.தனபால சிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5351)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5346)

## வீடு வாடகைக்குத் தேவை

வைத்திய அதிகாரி ஒருவரின் குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. மாநகரசபை எல்லைக்குள் இருப்பது விரும்பத்தக்கது. வாடகை விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 1550, C/o உதயன், யாழ்ப்பாணம். (5319)

## வீடு தேவை

கந்தர்மடம், திருநெல்வேலி, பிறவுண் றோட், நல்லூர் பகுதிகளில் வீடு விலைக்குத் தேவை. விற்க விரும்புபவர்கள் விலை விவரங்களுடன் தொடர்புகொள்ளவும்: விளம்பர இல. 1551, C/o உதயன், யாழ்ப்பாணம். (5320)

## தேவை

ஒரு நல்ல நாய்க்கூடு தேவை. தொடர்பு: க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5347)

## இறைச்சிக்கோழி தேவை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5349)

## தவறிவிட்டது

ஒரு தொகைப் பணமும் முக்கிய ஆவணங்களாகிய Credit Card; I.C., Driving Licence ஆகியன அடங்கிய Wallet 26ஆம் திகதி இரவு மிலேனியம் Restaurantஇற்கும் Y.M.C.A.இற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியிலுள்ள செலான் வங்கியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5313)

குழந்தைவேலு சோமசுந்தரம் ஆகிய எனது தேசிய அ.அ. (இல. 413361680V) (தனி சிங்களத்தில்) இல.150, கொழும்பு வீதி ஜா-எல என்ற விலாசத்தைக் கொண்டது. விசேட அ. அ. (இல.0905011290) மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் K.சோமசுந்தரம், சந்தை ஒழுங்கை. சுதுமலை வடக்கு, மானிப்பாய் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (5360)

அன்ரனி கறோளினி என்பவரது தே.அ.அ. (இல.808474670V), விசேட அடையாள அட்டை (இல.0914002534), பல்கலைக்கழக அடையாள அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம் என்பன அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 17/3, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குளி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5357)

## FOR SALE

Honda Press cup 50 cc New Motor Cycle, Akira T.V. 14", Audio, Video Player, Tamil hits V.C.D. Contact: Mr.S.Sunger, Mathavady Lane, Thirunelvely, Jaffna. (5353)

## இலகு திருமண சேவை

1975, திருவோணம், செவ்வாயற்ற, Computer Science III சித்தியடைந்த, U.K. வதிவிடமையுள்ளவருக்கு அழகான, படித்த பெண் தேவை. விரைவில் வரவுள்ளார். உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு தொடர்புகொள்ளவும். துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (5154)

## நாளை வியாழமாற்றம்

30.06.2002 வியாழமாற்றம் எங்கும் விற்பனையாகின்றது. 'ஜீவன் - பிரம்மம் - ஐக்கிய வேதாந்த இரகசியமும்' நூலாசிரியர்-தத்துவஞான, ஜோதிட விஞ்ஞானம். Prof. சத்தியதாசன் (சத்யா) MECH.E, ELEC.E (Cey/Lond) ஆனைக்கோட்டை. T.P.No.021/2753 (5301)

## ஒரு காதலின் கதை

இலங்கை இனப்பிரச்சினையுடன் பின்னிப் பிணைந்தது. அதன் ஆரம்ப காலத்தைச் சித்திரிப்பது. உண்மையான மனிதர்களையும், உண்மைச் சம்பவங்களையும் கொண்டது. 350 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இரண்டாவது நாவல். (5297)

## வகுப்புக்கள்

ஆங்கிலம் விசேடமாக O/L பரீட்சையில் A,B,C பெறுபேறுடைய தரம் 8,9,10 உட்பட A/L, G.A.Q. ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப் படும். B.Sc. (Cey), 85, சிவன் கோயிலடி, சிவன்கோயில் பின்புறம், திருநெல்வேலி. (5311)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு பொருள்கள் அன்பளிப்பு

மருதங்கேணிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு யூ.என். எச்.சி.ஆர். (U.N.H.C.R.) நிறுவனம் வீட்டுத் தளபாடங்கள், உடுப்புகள் ஆகியனவற்றினை வழங்கியுள்ளது.

மாமுனை தொடக்கம் கேவில் வரை 9 கிராம சேவையாளர் பிரிவுகளில் மீளக்குடியேறிய மக்களுக்கே இப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

சாப்பாட்டுப் பாத்திரங்கள், வாளி, பாய், படுக்கை விரிப்பு, சேலை, சரம், சட்டைத்துணி ஆகிய பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-182)

**மாதச் சம்பளம் ரூபா 580,000/=!**

*விவரங்களுக்கு 16/6, 23/6/2002 "உதயன" நாளிதழைப் பார்க்கவும். அல்லது நேரில் வரவும்.*

திருஞானாஸ்
141, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(5367)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது சங்கத்தின் அங்கத்தவரும், உள்ளகக் கணக்காய்வாளருமான

**வைத்திய கலாநிதி பேதுறு பிலிப்ஸ்**

**அவர்கள் அண்மையில் சகஸ்ராபிஷேக வைத்திய சிகாமணி விருது அரசினால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறித்து நாம் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

**D.A.M.பட்டதாரி வைத்திய சங்கம்,**
**யாழ்ப்பாணம்.**
(5364)

உ

ஊர்காவற்றுறை

## அரசினர் வைத்தியசாலை ஞானவைரவர் திருக்கோயில குடமுழுக்காட்டு விழா

*காலம்:* ஆனி 16ஆம் நாள் நாளை (30.06.2002) ஞாயிறு
*நேரம்:* மு.ப. 9.30 மணிமுதல் 10.30 மணிவரையிலான சுபமுகூர்த்தம்

கும்பாபிஷேக விழாவைத் தரிசிக்க அடியார்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

பிரதிஷ்டா பிரதமகுரு: **பிரம்மஸ்ரீ தாணு. வாசுதேவ சிவாச்சாரியார்**
*(யாழ். கலட்டி மாரியம்மன் கோயில், பிரதமகுரு)*

சர்வசாதகாசாரியார்: **பிரம்மஸ்ரீ மு.சோமசுந்தரக் குருக்கள்**
*(அம்மன் கோயில், உரும்பிராய்)*

(5287) **- ஆலய பரிபாலன சபை.**

## வேலையற்ற பட்டதாரிகள் சங்க அலுவலகம் இடம்மாற்றம்

**இதுவரைகாலமும் இலக்கம் 34, மாரியம்மன் வீதியில் இயங்கி வந்த எமது அலுவலகம் நாளை (30.06.2002) ஞாயிறுமுதல் திரு. தம்பையா மாஸ்டர், இல.37/15, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி என்ற இடத்துக்கு இடம்மாற்றப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். பிரதி ஞாயிறு தோறும் காலை 9.30 மணிமுதல் 1.30 மணிவரை அலுவலகம் திறந்திருக்கும்.**

*குறிப்பு:* **B.COM, B.B.A., B.A.F., H.N.D.A., H.N.D.C. பட்டதாரிகள் தமிழீழ வைப்பகத்துக்கு ஆள்சேர்ப்புக்கான விண்ணப்பப்படிவத்தைச் சங்க அலுவலகத்தில் நாளை (30.06.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் இதுவரை எதுவித வேலையுமில்லாத *விவசாய விஞ்ஞானமாணி* (B.Sc-Age.) பட்டதாரிகள் தேவையாக இருப்பதனால், அவர்கள் ஞாயிற்றுக்கிழமை அலுவலகத்துக்கு வருகை தரவும். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் தமக்குரிய நியமனக்கடிதத்தைப் பெற்றுக்கொள்ளவும்.**

*வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்,*
*யாழ்ப்பாணம்.*

**வே.மணிமாறன்**
**தலைவர்.**
(5363)


## ஸ்கந்தவரோதயக் கல்லூரி
## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2002

*காலம்* : இன்று (29.06.2002) சனிக்கிழமை பி.ப. 1.30 மணி
*இடம்* : கல்லூரி மைதானம்
*தலைவர்* : **திரு. க.சிவாஜி** அவர்கள் ***(அதிபர்)***
*பிரதம விருந்தினர்* : **திரு. A.எதிர்வீரசிங்கம்** அவர்கள்
(உபதலைவர், ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம், கொழும்பு)
*சிறப்பு விருந்தினர்:* **திரு. அ.தற்பரானந்தன்** அவர்கள்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்)
*துறைசார் விருந்தினர்:* **திரு. வீ.பாலசிங்கம்**
(உதவிக் கல்விப் பணிப்பாளர், உடற்கல்வி)

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

*கந்தரோடை,*
*சுன்னாகம்.*
(5371)
**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்.**

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் மாணிக்கம் கந்தசாமி** (மணியண்ணை)

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த உங்களை
எங்கள் அன்பு நெஞ்சங்கள் மறக்க முடியுமா?
*ஆத்மா சாந்தி அடைவதாக!*

*நல்லூர் வடக்கு, நல்லூர்.* (5377) - உறவினர்.

## 31ஆம் நாள் நினைவு கூரல்

எமது சங்கப் பணியாளர்

**திரு. க.செல்வரத்தினம்** அவர்களது

அருமைத் தந்தையார்

**முருகன் கணபதி**

அவர்கள் இறைபதம் எய்தி 31ஆம் நாள் நிறைவில்
அன்னாரை நினைவு கூருகின்றோம்.

*கிராமக் கோட்டடி,*
*புலோலி.*
(5366)
பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ.ச.
பணியாளர் நலன்புரிச்சங்கம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பார்வதிப்பிள்ளை பரராஜசேகரம

சாவகச்சேரி, தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பார்வதிப்பிள்ளை பரராஜசேகரம் நேற்றுமுன்தினம் (27.06.2002) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் சரவணமுத்து பரராஜசேகரத்தின் அன்பு மனைவியும் சிவஞானவதி (கனடா), காலஞ்சென்ற மகேஸ்வரி (கனடா), செகராஜசேகரம் (கனடா), காலஞ்சென்ற சரவணமுத்து (நேவி, சாவகச்சேரி), காலஞ்சென்ற ஜெயராசா (கல்வியங்காடு), காலஞ்சென்ற இந்திரசேனன் (டென்மார்க்) மற்றும் அருந்ததி (கனடா), பத்மநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சற்குணசிங்கம், பாலசண்முகநாதன், குலமணி, இராசமணி, இராஜேஸ்வரி, சறோஜினிதேவி, சந்திரபோஸ், மாலா ஆகியோரின் மாமியாரும் ஞானகுணசீலன் (செல்வன்), ஞானகுணாளன் (குணாளன்), சற்குணவதி (செல்வி), ஞானமனோகரன் (மனோ), சிவகுணாளன் (றஞ்சன்), பாலேஸ்வரி, பால நந்தினி, பாலதர்ஷினி, கௌரி, சேகர், சங்கர், செந்தில்குமரன், அனுஷா, குலதுங்கன், தக்ஷியா, கஜேந்திரன், ராஜசேனன், நிஷாந்தினி, பிரகாஷ், சுபாஷினி, சுரேன், நிரஞ்சலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மைதிலன், றதீபன், கௌதமி, நிறூஜன், ஹரிதாஸ், சங்கரி, ஜெசீபன், சஜீபன், பைரவி, வைஸ்ணவி, சங்கவி, சிவஜன், வாகீசன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2002) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*தாமோதரம்பிள்ளை வீதி,* ***திருமதி சிவஞானவதி சற்குணசிங்கம்***
*சாவகச்சேரி.* (C-22736) *(மகள்)*

### வைரவநாதன் சுப்பிரமணியம்

(ஓய்வூதியர், நீர்வேலைப்பகுதி, யாழ். மாநகரசபை)

ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த வைரவநாதன் சுப்பிரமணியம் நேற்று (28.06.2002) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் தில்லையம்மாவின் அன்புக் கணவரும் நற்குணசீலன் (இ.மி.ச), நற்குணவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், S.K.N.தவராசா(யாழ். பல்கலைக்கழகம்), ந.ராதிகா (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கவாஸ்கா, சுவாஸ்கா, வைகுந்தன், கௌஸ்துபன், சிவாஸ்கர், பிரசாந்தன், கிஷாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2002) சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"வைகுந்தபதி"*
*ஆலடி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*

*தகவல்:*
சு.நற்குணசீலன் - *மகன்,*
S.K.N.தவராசா - *மருமகன்.*
(5358)

### ஆண்டு நிறைவு விழா

கைதடி நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலையின் பழைய மாணவர் சங்க 35ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று காலை 8.30மணிக்கு சுண்டுக்குளியில் அமைந்துள்ள நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-9)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்29

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்திவரும் 'ரொப் ரென்' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை ஞாயிற்றுக்கிழமை கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பி.ப. 4 மணி - கலட்டி ஐக்கிய வி.கழகம் எதிர் அல்வாய் நண்பர்கள் வி.கழகம்.

★ பி.ப. 5 மணி - வதிரி யங் லயன்ஸ் வி.கழகம் எதிர் வல்வை ஆதிசக்தி வி.கழகம். (ஐ-ரி)

★ ★ ★

இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கி அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தினரால் நடத்தப்பட்டுவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சிக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள இரண்டாம் சுற்றுப் போட்டியில் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகமும் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகமும் பங்குபற்றுகின்றன.

(ஐ-ரி-86)


### 30-06-2002 கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

## அறிவித்தல்

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து) சாவகச்சேரி

மேற்படி சங்கத்தின் 23 கிளைகளுக்குமான கிளைக்குழு உறுப்பினர் தெரிவு, விளம்பரங்களில் கூறியவாறு நாளை (30.06.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும். கிளைப் பொதுச்சபைக் கூட்ட அறிவித்தல் இதுவரை கிடைக்கப்பெறாதவர்களும் இந்த அறிவித்தலை கிளைப் பொதுச்சபைக் கூட்ட அறிவித்தலாக ஏற்று கிளைப் பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு மீண்டும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*தங்கள் கூட்டுறவு சேவையிலுள்ள*
*தலைவர்.*

28-06-2002 (C/22743)

## இடம்மாற்றம்

இதுவரைகாலமும்
இல.298, காங்கேசன்துறை வீதி, மருதனார்மடம்,
சுன்னாகத்தில் இயங்கிவந்த எமது நிறுவனமான

### "Photo Select" போட்டோ செலெக்ற்

புகைப்படக் கலையகம் ஜூலை மாதம்முதல் நெட்டிலிப்பாய், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் எனும் முகவரிக்கு இடம்மாற்றப்படவுள்ளதால் வாடிக்கையாளர்கள் தமது கொடுக்கல்வாங்கல் நிகழ்வுகளை 05.07.2002 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

\- உரிமையாளர்கள்.

(5382)


## கண்ணீர் அஞ்சலி

மல்லாகம் முருகமூர்த்தி ஆலய பரிபாலனசபையின் முன்னாள் பொருளாளரும் கட்டட ஒப்பந்தகாரருமாகிய

### ஆறுமுகம் சுவாமிநாதன்

அவர்கள் 27.06.2002இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கோட்டைக்காடு,* சாளம்பை முருகமூர்த்தி பரிபாலனசபையும்,
*மல்லாகம்.* (5373) இந்து இளைஞர் தொண்டர் சபையும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | ஏற்றம் |
| --- | --- |
| 14 - 07 - 1927 | 30 - 05 - 2002 |



### அமரர் சோமசுந்தரம் பரராஜசிங்கம்

*(முன்னாள் மாநகரசபை ஊழியர்)*

பெற்று வளர்த்தெம்மைப் பெயரிட்டு
கற்பவை கற்க வழிகாட்டி ~ எம்மை
நிற்க நெறியும் நீ காட்டி மறைந்தாய்
என்சொல்லி ஏத்துகோம் நினைந்து?

இன்று (29.06.2002) சனிக்கிழமை எமது இல்லத்தில் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நடைபெறும். அந்நிகழ்விலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*257, பலாலி வீதி,* மனைவி,
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (5379) பிள்ளைகள்.


## ஜெசித்தாரா

புதுப்பொலிவுடன் வழமைபோல்
உணவுப் பொதிகள்
நண்பகல் 12 மணிமுதல்
பிற்பகல் 3.00 மணிவரை.
குங்குமப்பூ சிக்கன் புரியாணி,
சில்லி சிக்கன்
விலை குறைக்கப்பட்டுள்ளது.

ஜோ.எகட்டனின்
ஜெசித்தாரா உங்கள்
விருந்தகம்

19/3, சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (5376)

## நாகம்ஸ் சுன்னாகம்

நவரச நாயகன் கார்த்திக்
(இருவேடம்),
ரோஜா, கௌசல்யா நடித்த

### சந்தித்தவேளை

(ரீஸ்ஸ்)
காட்சிகள்: 11.00,3.00,6.30 (புதிய நேரம்) (5370)

## லஷ்சுமி இணுவில்.

பிரசாந்த், ரீங்கிகண்ணா, ரகுவரன்

### மஜ்னு

(ரீஸ்ஸ்)
தினசரி: 10.30,2.30,6.00 (ப.நே.) (5385)

## ராஜா யாழ்ப்பாணம்.

4ஆம் திகதிவரை
குணால், மோனல் மற்றும் பலர் நடித்த (C/22538)

### பேசாத கண்ணும் பேசுமே...

காட்சிகள்: தினசரி 10.30, 2.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 5.30

## நிறைஞ்சனாஸ்

சங்கானை
ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், விவேக் நடித்த

### ரோஜாக்கூட்டம்

(ரீஸ்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்) (C-22539)


## வாழ்த்துகின்றோம்



ஆரம்பகால சேவையாளனாகிய

### உயர்திரு. வீ.ஆனந்தசங்கரி

*(நாடாளுமன்ற உறுப்பினர்)*

அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டமையையிட்டு நாம் அகமிகமகிழ்வதுடன் அவரது சேவைகள் மென்மேலும் சிறப்புற உளமார வாழ்த்துகின்றோம்.

தலைவர், உப-தலைவர்,
கூட்டணி உறுப்பினர்கள்,
வலிகாமம் வடக்கு பிரதேச மக்கள்.

(5281)


## யாழ்ப்பாணம் - மாநகரசபை அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான கடைகளுக்கான வாடகை மீளாய்வு - 2002

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான கடைகளின் வாடகை மீளாய்வுக் கட்டணம், விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 01.07.2002ஆம் திகதிமுதல் இப்புதிய வாடகைக் கட்டணம் நடைமுறைப் படுத்தப்படும் என்பதை சகல வாடகைக் குடியிருப்பாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 28.06.2002. (C/22739)

## பொதுக்கூட்டம்

### முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் "புதிய நிர்வாகத் தெரிவும்"

இடம் : வணிக மண்டபம் II (CH2)
நாள் : இன்று (29.06.2002) சனிக்கிழமை
நேரம் : மாலை 4.30 மணி

அனைத்து முல்லை மாவட்ட மாணவர்களும் தவறாது கலந்துகொள்ளவும்.

முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(5384)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி முத்தம்மா கனகரெத்தினம்

வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும் 51, செட்டித்தெரு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தம்மா கனகரெத்தினம் நேற்று (28.06.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சங்கரத்தையைப் பிறப்பிடமாகக்கொண்ட காலஞ்சென்ற கே.வி.கனகரெத்தினம் (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், உணவுத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் செல்வி சுலோஜனாவின் அன்புத் தாயாரும், விக்னராஜாவின் (கொழும்பு) சிற்றன்னையும் காலஞ்சென்றவர்களான V.S.ராஜரட்ணம் (ஓய்வுபெற்ற கட்டடப் பொறியியலாளர், மலேசியா), V.S.நல்லையா (ஓய்வுபெற்ற தபால் தந்தித் திணைக்கள மாவட்ட அத்தியட்சகர்), V.S.திருச்செல்வம் (ஓய்வுபெற்ற துறைமுகப் பொறியியலாளர், கொழும்பு), சிதம்பரம், மூத்தபிள்ளை, தங்கம்மா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2002) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் முற்பகல் 11.00மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*51, செட்டித்தெரு ஒழுங்கை,* *தகவல்:*
*நல்லூர்.* (5380) க.சுலோஜனா (மகள்)

## குழந்தைவேலு நடராசா

**(ஓய்வுபெற்ற கட்டட மேற்பார்வையாளர் - புகையிரதத் திணைக்களம்)**

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் விநாயகர் வீதி, அல்வாய் தெற்கை வதிவிடமாகவும்கொண்ட குழந்தைவேலு நடராசா 24.06.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அழகம்மா (கனடா) அவர்களின் அன்புக் கணவரும் அழகரத்தினம் (ஆசிரியர், நெல்லியடி ம.ம.வி.), இராசரத்தினம் (பண்டகசாலைப் பொறுப்பாளர், வ.பி.போ.சே., வவுனியா), செல்வரத்தினம் (கனடா), தியாகரத்தினம் (நோர்வே), குணரத்தினம் (கனடா), சீவரத்தினம் (கனடா), சுகந்தா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அ.பவளராணி, இ.வசந்தமலர், செ.நிர்மலா (கனடா), தி.இன்பம் (நோர்வே), கு.பிரமிளா (கனடா), சீ.விஜி (கனடா), மோகன் (கனடா), ந.வசீகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அ.மலரவன் (இறுதியாண்டு மாணவன், விஞ்ஞான பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்), தேவகுமார், மகிந்தா (நோர்வே), அ.வினோதா, இ.மாலவன் (21ஆம் அணி, மருத்துவபீடம், யாழ்.பல்கலைக் கழகம்), இ.சுதர்சன், இ.ஆதித்தன், இ.மீரா, செ.அரவிந், செ.அபிரா, செ.அனா, தி.எழில், தி.இனியவன், கு.லக்சி, கு.லொரிசா, சீ.நனுயா, மோ.சிந்துயன், மோ.சிந்துயா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஐ.த. பரமசாமி (கல்லுவம்), ஐ.த.நடராசா (மீசாலை கிழக்கு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2002) சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விநாயகர் வீதி,* தகவல்:
*அல்வாய் தெற்கு, அல்வாய்.* (5375) அழகரத்தினம் (மகன்).

## திருமதி வள்ளியம்மை ஆறுமுகம்

கைதடியைப் பிறப்பிடமாகவும் கைதடி, நாவற்குழியை வசிப்பிடமாகவும் தற்போது திருநெல்வேலியில் வசித்தவருமான திருமதி ஆறுமுகம் வள்ளியம்மை அவர்கள் 27.06.2002 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற S.K.ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, மகேஸ்வரி, ஸ்ரீகாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான துரைரத்தினம், பொன்னையா மற்றும் தங்கம்மா, சாந்தநாயகி, சரஸ்வதி, பஞ்சரத்தினம் ஆகியோரின் சிறிய தாயாரும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, திருநீலகண்டன் (C.T.B.), பரந்தாமதி, புவனேஸ்வரி, காலஞ்சென்ற சின்னத்தம்பி, தணிகாசலம் (J.P.), சுப்பிரமணியம், பேரின்பநாயகி ஆகியோரின் மாமியாரும் விஜயகுமார், சத்தியபாமா, வினோதினி, விக்னகரன், விஜிந்தினி, விஜயறதனி, நிருஜினி, நிஷாந்தினி, நிர்மலரூபன், சுவெர்ணியா, அனுஷியா தில்லை நடராசா, பவளகாந்தன் அனுராதா, பவளராணி நல்லநாதன், பவளநாதன் சியாமளா, பவளகுமார் சாந்தநாயகி, பாலகுமரன் கௌரி, ஞானகுமரன் மேகலா, ஞானசக்தி கணேசநாதன், செல்வகுமரன் ஜமுனா, ஆனந்தசக்தி, சுரேஸ்குமார் கிருஷாந்தி, சுபோதினி ஸ்ரீதரன், சுகந்தினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் வியாழினி, முகுந்தன், கிரித்திகா, சைலோஜினி, சைரேகா, ஈஸ்வரன் தாட்சாயினி, சுபாஷினி பார்த்தீபன், சபேசன், ஸ்ரீசாந்தினி, சிவதர்சன், கஜலக்ஷி, கஜகரன், கஜந்திகா, ஜீவிதன், கோபிதா, விதுர்சன், சிவகாமி, தணிகைக்குமரன், வைஷ்ணவி, சாம்பவி, விசாலினி, கஜானன், அகிலன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2002) ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி: தகவல்:
*528, பலாலி வீதி,* ஆ.ஸ்ரீகாந்தன் (மகன்),
*திருநெல்வேலி.* (5386) ந.திருநீலகண்டன் (மருமகன்).

# பேச்சுக்கு முன்னர் தடை நீக்கம் உறுதி என்கிறார் அமைச்சர் ஜயலத்

சென்னை,ஜூன்29

பேச்சுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படுவது உறுதியாகிவிட்டது. அதில் எந்த மாற்றமும் இருக்காது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவை நேற்று சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பேச்சுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்ட பின்னர் அந்தத் திகதிக்கு பத்து நாள்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படும்.

புலிகள்மீதான தடை ஒருபோதும் நீக்கப்படாது என்று வெளியாகும் செய்திகளில் எந்த உண்மையும் இல்லை. இருப்பினும் புலிகள் மீதான தடைநீக்க விடயத்தில் அரசுக்கு பாரிய அழுத்தங்கள் இருப்பது உண்மையே.

- இவ்வாறு அமைச்சர் ஜெயலத் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# திருக்கேதீஸ்வரம் ஆலயப் பிரதேசம் புனித நகராகப் பிரகடனம் செய்யப்படும்

## பிரதமர் கூறியதாக அமைச்சர் மகேஸ்வரன் தகவல்

கொழும்பு,ஜூன்29

பிரசித்திபெற்ற திருக்கேதீஸ்வரம் ஆலயப்பகுதி புனித நகராகப் பிரகடனம் செய்யப்படவிருக்கின்றது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியாகும்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

தமது அமைச்சு அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சு செயலாளர்கள் சகிதம் பிரதமரை நேற்றுச் சந்தித்து வடக்கு-கிழக்கு ஆலயப் புனரமைப்புத் தொடர்பாகக் கலந்துரையாடினோம்.

திருக்கேதீஸ்வரம் ஆலயப் பகுதியைப் புனித நகராகப் பிரகடனம் செய்யப் பிரதமர் இணங்கியுள்ளார். விரைவில்அது தொடர்பான வர்த்தமானியை பிரதமர் வெளியிடுவார்.

வடக்கு - கிழக்கு ஆலயங்களைப் புனரமைக்க 929கோடி ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளதாகப் பிரதமரிடம் தெரிவித்தோம். இந்த நிதியை படிப்படியாக வழங்குவதாகப் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

கீரிமலை புனித கேணிக்கு மக்கள் சென்றுவர விசேட ஏற்பாடு செய்துதருவதாகப் பிரதமர் உறுதியளித்துள்ளார் - என்று அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-3)

### ஈ.பி.டி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர் இளம்பரிதி, தீவகப் பொறுப்பாளர் செம்மணன், உறுப்பினர் தயாளன் ஆகியோரும் அங்கு பிரசன்னமாயிருந்தனர்.

ஈபிடிபியின் சார்பில் எவரும் சமுகமளிக்கவில்லை.

நேற்றைய விசாரணைகளில் செம்மணன், தயாளன் ஆகியோரும் சம்பவம் நடந்த இடத்தில் உள்ள வீட்டின் உரிமையாளர், அவரது மனைவி, அயல்வீட்டுக்காரர் இருவர் ஆகியோரும் தமது சாட்சியங்களை அளித்தனர்.

இருதினங்கள் இங்கு விசாரணைகளை நடத்த இக்குழு திட்டமிட்டிருந்ததாகவும் - எனினும் சாட்சியங்கள் நேற்றே பதிவுசெய்யப்பட்டதால் குழு இன்று கொழும்பு திரும்புவதாகவும் - கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-3-8)

### எழுதுமட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முனகியவாறு கிடக்கக் காணப்பட்டார் என்றும் -

உடனடியாக அவரை மாட்டுவண்டில் ஒன்றில் ஏற்றி மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துவந்தவேளை வழியில் அவர் உயிரிழந்ததாகவும் -

கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலீஸார் சாவகச்சேரி பதில் நீதிவான் அபிரேம்சங்கருக்கு அறிவித்ததை அடுத்து அவர் சம்பவம் நடந்த இடத்தைச் சென்று பார்த்தார். மந்திகை ஆஸ்பத்திரிக்குச் சென்று சடலத்தையும் பார்வையிட்டார். பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

மந்திகை ஆஸ்பத்திரிப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை பிரேத பரிசோதனை நடத்தினார். சடலத்தின் கழுத்துப் பகுதியில் சூட்டுக் காயம் காணப்பட்டது.

இறந்த இளைஞர் மாடுகளைத் தேடி படையினர் பயிற்சியில் ஈடுபடும் பகுதிக்குள் சென்றிருக்கலாம் என்றும் -

பயிற்சியின் போது ஏவப்படும் வேட்டுக்கு இலக்காகியிருக்கலாம் எனவும் -

சந்தேகிக்கப்படுகிறது

(ஐ-117-173)

### ஜனாதிபதியின் பிறந்த தினம் இன்று

கொழும்பு,ஜூன்29

இன்று ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் 57ஆவது பிறந்த்தினமாகும். இதனை ஒட்டி ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சிறுவர்களுக்கு விசேட விருந்துபசார வைபவம் ஒன்று இடம்பெறவுள்ளது.

மதவழிபாட்டுத் தலங்களிலும் விசேட ஆராதனைகள் இடம்பெறவுள்ளன. (ஐ-12)

### 10 குடும்பங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா அகதிமுகாம்களில் தங்கியிருப்பவர்களில் குடாநாட்டில் மீளக் குடியமர விரும்புபவர்கள் கப்பல் மூலம் முன்னர் அனுப்பிவைக்கப்பட்டு வந்தனர்.

முதற்றடவையாக தரைவழியாக நேற்றுக் குடாநாட்டுக்கு அகதிகள் அனுப்பப்பட்டுள்ளனர். (ஐ-3)

### கடற்போக்குவரத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகைதந்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரொன்ட் புருகோவிட்டுக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் நடந்த கலந்துரையாடலின் பின்னரே புலிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

நேற்றுமாலை 4 மணிமுதல் 5.30 மணிவரை இடம்பெற்ற பேச்சுக்களில் மூதூர் நிலைமை, விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் தாக்கப்பட்ட விடயம் ஆகியன தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (ஐ-3-4)

### மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், வன்செயல்கள் கட்டுக்கடங்காமல் பரவியதை அடுத்து அரசு இந்த அவசர நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

தற்போதைய வன்செயல்கள் தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்களுக்கிடையிலான இனக்கலவரமாக மாறிவிடும் பேராபத்தைத் தவிர்க்கவே அரசு இரு மாவட்டங்களிலும் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியிருக்கிறது.

வன்முறைக்கும்பல்கள் கிரனேட்டுக்கள் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல்களில் ஈடுபட்டுவருகின்றன. இதனால் நிலைமை பாரதூரமான கட்டத்தை எட்டியிருக்கிறது.

நேற்று மாலைவரை ஆறுபேர் உயிரிழந்திருக்கின்றனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்திருக்கின்றனர். பெரும் எண்ணிக்கையான கடைகள், வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன.

கிழக்கின் நிலைமையை உடனுக்குடன் அறிவதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்றிரவு அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார் என்று தெரிவிக்கப்பட்டது.

மூதூரில் கடந்த செவ்வாயன்று ஆரம்பித்த வன்செயல்கள் நான்காவது நாளாகத் தொடர்கின்றது.

வன்செயல்களுக்கு ஆட்சேபம் தெரிவித்து இரு சமூகங்களும் ஹர்த்தால் மற்றும் கண்டனப் போராட்டங்களை முன்னெடுத்தபோது வன்செயல்கள் மேலும் தீவிரமடைந்திருக்கின்றன. (ஐ-3-12)

### கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து அமுலில் இருந்தது.

நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் ஏ.சி.அதாவுல்லா, வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர், கடற்றொழில் பிரதியமைச்சர் மொகிதீன் அப்துல்காதர், கொள்கை திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் செய்யத் அலிசாஹிர் மௌலானா, ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி., தங்கவடிவேல் எம்.பி. ஆகியோரே நேற்று வாழைச்சேனைக்கு வருகைதந்தனர்.

பதில் பொலீஸ் மா அதிபர் ரி. ஆனந்தராஜா, கிழக்கு மாகாணப் பிரதிப் பொலீஸ் மா அதிபர், கண்காணிப்புக்குழு உறுப்பினரான ஏ.ரகுமான், அரசாங்க அதிபர் எஸ்.சண்முகம் ஆகியோரும் அமைச்சர்கள் குழுவுடன் வந்திருந்தனர். வாழைச்சேனை பொலீஸ் நிலையத்துக்குச் சென்ற பொலீஸ்மா அதிபரும் அமைச்சர்களும் அங்கு கூட்டம் ஒன்றை நடத்தினர். மீண்டும் அமைதியை ஏற்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து அவர்கள் ஆராய்ந்தனர். பின்னர் பாதிக்கப்பட்ட கடைத் தொகுதிகளைச் சென்று அவர்கள் பார்வையிட்டனர். அசம்பாவிதங்களினால் 66 கடைகள் சேதமாக்கப்பட்டன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. சில கடைகள் சூறையாடப்பட்டிருக்கின்றன. (ஐ-3-12)

### கைதிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை அங்கு அழைத்துச்செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஏ-9 தரைப்பாதை ஊடாக கைதிகளை அழைத்துச்செல்ல பாதுகாப்பு அனுமதி கிடைக்கவில்லை என்று சிறைச்சாலை வட்டாரங்கள் கூறுகின்றன.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி ஏ-9 வீதியைப் பயன்படுத்தும் பொலீஸாரோ படையினரோ ஆயுதங்களைத் தம்மோடு எடுத்துச்செல்ல முடியாது. கைதிகளைத் தரைவழியாக அழைத்துச் செல்வதாயின் பாதுகாப்புக்காக ஆயுதங்களுடன் பொலீஸாரும் செல்லவேண்டியது அவசியம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இதனையடுத்தே கைதிகளை விமானத்தில் அழைத்துச் செல்ல முயற்சி எடுக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(ஐ-180)


SPOKEN ENGLISH WITH GRAMMAR
Lectures By:
MR.M.A.HARI
* புதிய பிரிவு ஆரம்பம் *
02.07.2002 செவ்வாய்
மாலை 5 மணி
Tuesday / Thursday } 5 p.m. - 6 p.m.
Director,
HARY'S INSTITUTE
Kondavil East, Kondavil
(5324)

G.A.Q.
B.A. Part - I
B.A. Final
எழுதுவினைஞர் பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்: 30.06.2002
ஞாயிறு 4.00 p.m.
திகழ் கல்வி நிறுவனம்
இணுவில்.
(5374)

SUBRA (14)
சித்தன்கேணி
பௌதிகவியல்
மின்புலம்
By: கருணாநிதி B.Sc.(Spl)
Mon. - Fri. 3-4 p.m.
ஆரம்பம்: 01.07.2002 (Mon.)
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை.
(C/22729)

THE HALO TRUST
தேவை - மொழிபெயர்ப்பாளர்
கண்ணிகள் அகற்றும் பணியில் நிபுணத்துவம் வாய்ந்த பிரித்தானிய அரச சார்பற்ற நிறுவனமொன்றிற்கு மொழிபெயர்ப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். வண்ணப்பதாரிகள் ஆங்கில, தமிழ், சிங்கள மொழிகளில் தேர்ச்சியும் சரளமாகப் பேசும் திறனும் 25 - 35 வயதுக்குட்பட்டவர்களாகவும் வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரமுடையவர்களாகவும் (நடைமுறையிலுள்ள) இருத்தல்வேண்டும்.
தொடர்புகளுக்கு:
THE HALO TRUST,
655, NAVALAR ROAD,
JAFFNA. T.P. - 3779.
(5305)

ENGLISH
Spoken and Grammar
By: BRITTO
ஆரம்பம் : 03.07.2002 (புதன்)
இடம் : 'தேன் ஒளி' மாதர் சங்க மண்டபம், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
நேரம் : காலை 10.30 மணி (ப.நே.) (திங்கள், புதன்)
(5354)

எழுதுநர் பரீட்சை
வழிகாட்டல் வகுப்புகள்
க.தவசேகர்
D.M.I யாழ்நகர்.
பிரிவு I வெள்ளி 4 - 6 பி.ப.
பிரிவு II ஞாயிறு 2-4 பி.ப.
ஆரம்பம்: 30.06.2002
★ ஞானோதயா சாவகச்சேரி திங்கள் 4-6 பி.ப.
★ சயன்ஸ் சென்ரா நெல்லியடி செவ்., புதன். 5-6 மணி
(சி/22740)

நியூ ரோயல் அக்கடமி
சங்கத்தானை, சாவகச்சேரி.
A/L கலை, வர்த்தகம்
2003 DAY CLASS
எமது வழமையான ஆசிரியர்களுடன்
ஆரம்பம்: 01.07.2002
Mon. 2.30 p.m.
(5352)

CAREER.COM INSTITUTE
Dear Students;
நீங்களும் ஒரு கணக்காளன் ஆக வேண்டுமா?
aat கற்கைநெறியுடன் இணைந்துகொள்ளுங்கள்.
aat கற்கை நெறிக்கான தகமைகள்
G.C.E O/L 6 பாடங்களில் சித்தி
OR
G.C.E A/L 2 பாடங்களில் சித்தி
குறிப்பு: 2002 December aat பரீட்சையில் தோற்றுவதற்கான உங்கள் பதிவுகளின் இறுதி நாள 05-07-2002
தொடர்பு: இல 79, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (யாகப்பர் ஆலயம், முன்பாக)
அலுவலக நேரம்: தினமும் 10 am - 3 pm
aat க்கானவிரிவுரைகள்: சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ். றோட், இணுவில்
A/L DAY CLASS
கலை - வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்:
யாழ்நகரில் - 01.07.2002 - திங்கள் - 8.00மணி (ப.நே.)
இணுவிலில் - 03.07.2002 - புதன் - 8.00மணி (ப.நே.)
(5331)

NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்
Spoken English With Grammar
புதிய பிரிவு
ஆரம்பம் : 30.06.2002
நேரம் : 10 மணி
வடமராட்சியின் முன்னணி ஆசிரியர்:
By:- MR.B.JOTHY
சனி, ஞாயிறு 10 - 12
(5339)


## மரண அறிவித்தல்

### செல்வி சிவகுலம் சியாமினி (பபி)

தையிட்டிபுலம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் தற்போது மயிலணி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிவகுலம் சியாமினி நேற்று (28.06.2002) வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் சிவகுலம் (தெ.ப.ப.நோ.கூ.ச., இளைப்பாறிய பணியாளர்)-திலகவதி (அளவெட்டி-மல்லாகம் ப.கூ.ச. பணியாளர்) ஆகியோரின் அன்பு மகளும் சிவரூபி, சிவறஜனி, தர்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ரவீந்திரனின் (சுவிஸ்) மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2002) சனிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மயிலணி,*
*சுன்னாகம்.*

தகவல்:
சிவகுலம் (தந்தை)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.